உ

சேர்கிரிநாதன் துணை.

குகமயம்.

வள்ளி திருமணம்.

இஃது

திருவாளர் மருங்காபுரி ஜெமீன்தாரவர்களின் நாற்பதாவதாண்டு

பிறப்புவிழாவை முன்னிட்டு

மருங்கைக் குகானந்த சபையாரின்

விருப்பத்தின்படி

ஷை ஜெமீன் பொக்கிஷதார்

வித்வான் வே. கோபாலய்யரவர்களால்

இயற்றப்பெற்று

ஷை ஜெமீன் ரெவினியூ இன்ஸ்பெக்டர்

C. பேரழத்து நாயக்கர் அவர்களால்

திருச்சிராப்பள்ளி

ஜனானுகூல அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1924.

O26:4y
N24,
181091

உ

சேர்கிரிநாதன் துணை.

குகமயம்.

வள்ளி திருமணம்.

இஃது

திருவாளர் மருங்காபுரி ஜெமீன்தாரவர்களின்

நாற்பதாவதாண்டு பிறப்புவிழாவை

முன்னிட்டு

மருங்கைக் குகானந்த சபையாரின்

விருப்பத்தின்படி

ஷை ஜெமீன் பொககிஷதார்

வித்வான் வே. கோபாலய்யரவர்களால்

இயற்றப்பெற்று

ஷை ஜெமீன் ரெவினியூ இன்ஸ்பெக்டர்

C. பேரழத்து நாயக்கர் அவர்களால்

திருச்சிறுப்பள்ளி

ஜனனுகூல அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

———

1924.

சாத்துக்கவிகள்.

வித்வான் மகா-௱-௱-ஸ்ரீ கிருஷ்ணசாமி பிள்ளை அவர்கள் சொல்லியது.

அறுசீர் விருத்தம்.

வாமமிகு வள்ளிமணக் கதையதனை நாடகமாய்
  மதிக்கப் பாரில்
நேமமுறப் பலகலைநூ லாய்ந்துணரும் பருணிதரின்
  நிலைத்த நேசம்
தாமருவுங் கேள்விவலோன் மதுரகவிக் கோபாலத்
  தமிழ்ச்சிம் மேறு
பாமகிழ நவரசமாய்ப் பாடினை னவன்பெருமை
  பகரப் போமோ. (1)

இத்தகைய நூற்பெருமை யாவருமே கொண்டாடி
  யினிது வாழ்த்த
சுத்தபரி பூரணமாய் நின்றிலகும் சேருகிரித்
  தூய வைவேற்
கத்தனருள் மிகமலியும் கனதனத்தான் போமுத்துக்
  கருணை வள்ளல்
புத்தகமா யச்சியற்றி யாவருமே மகிழ்ந்துபெறப்
  புகழ்பெற் றானே. (2)

மருங்காபுரி ஜெமீன் ரேஞ்சர் வித்வான் திருத்தகு T. C ருஜண்ண நாயுடு அவர்கள் சொல்லியது.

அறுசீர் விருத்தம்.

திங்களணி பரமனருட் சேயன்வடி வேற்குமரன்
  தினைப்புனத்துக்
கொங்குலவு குழல்வள்ளிநாயகியை மணந்துகளி
  கூர்ந்த காதை
இங்கிதஞ்சேர் நவரசமு மிலங்கிடவே நாடகமாய்
  இயற்றித் தந்தான்
பொங்குதமிழ் பாவாணர் நனிவியக்கும் கோபாலப்
  புலவன் மன்னே.

உ

சேர்கிரிநாதன் துணை.

வள்ளி திருமணம்.

விநாயகர் துதி.

வெண்பா.

சீர்பரவும் வள்ளி திருமணத்தைச் செந்தமிழிற்
பார்பரவும் நாடகமாய்ப் பாடுதற்குத்—தார்பரவுஞ்
செஞ்சடைபா னீன்றவுபர் சித்திக் கணபதியின்
கஞ்சமலர்த் தாளிணையே காப்பு.

வாணி துதி.

வெண்பா.

சத்திவடி வேல்வள்ளி தன்னை மணந்த கதை
யித்தரையில் நாடகமா யேற்றவே—முத்திதரு
முத்தமிநல் வாக்குதவு முன்னதஞ் சேர்விமலி
சுத்தமலற் றாளே துணை.

அவையடக்கம்.

வெண்பா.

முத்தமிழ்தேர் விற்பனர்தம் முன்னிலையிற் பாவறியேன்
பித்தனென நாடகநூற் பேசினேன்—இத்தரையில்
உத்தமர்க ளாம்பெரிய ருள்ள மகிழ்வரே
சத்திவடி வேல்மணப்ப தால்.

சூத்ரதார்:—(பிரவேசித்து, ஐங்கரனை துதிக்கின்றார்.)

(இராகம் கேதாரம்—தாளம் ஆதி.)

பல்லவி.

ஐங்கரனேயெனக் கருள்தரயிதுததி வா வா வா (ஐ)

அநுபல்லவி.

பைங்கழ லணிதிருப் பாதப்ரஸாதா
பாவைவல் லபைமகிழ் யோகப்ரக்யாதா (ஐ)

சரணம்.

யானைமுகமொளிர் மோனச்சுடரொளி வானவ னேதேவா
அநுதின முனதடி தொழுதுமே நாவால்
யான்பணிந் தேனேகோ பாலன்சொற் பாவால் (ஐ)

விநாயகமுகிலே! யான்கொண்ட காரியம் இனிது நிறைவேற அருள்புரிவீராக.

விநாயகர்.—அங்கனமே யாகுக.

[விநாயகர் மறைதல்.]

சூத்ரதார்:—(நாமகளைத் துதிக்கின்றார்.)

(ராஜ ராஜ என்ற மெட்டு.)

வேத னுவில் வீற்றிருக்கும் விச்வபூஷணி உன்னை
வேண்டினே னெந்தனை யாண்டருள் வாய்மேவும் அம்ஸவாகனி
மிளிர்பல கலையுணர் பாவலர்க் கருள்புரி வித்தகி கல்யாணி
நிதமுன திருமலர்ப் பதமற வாமலே மகிழ்வுட னேபேணி
நேமமோ டேற்றினேன் கோபாலன் போற்றிடும் நிமலிநல் லபிமானி.

வேறு நோட்.

நல்வரம் தந்தருள் வாய்வாணியே—நாளும்பணிந்தேன் பதங்காணியே
சொல்லும் புகழுயர் கல்யாணியே—துதியோங்கிடும் புத்தகபாணியே ()

நாமகள்.—

வேண்டும்வரம்யாது நீவிளம்பு—மேவும்ப்ரஸாதங் கிடைக்கும் நம்பு
ஈண்டென்னைக்காணுவர்க்கேதுவம்பு—இன்சொல் கோபாலன் தமிழ்
[விரும்பு ()

சூத்ரதார்.—

பாலர்களின்சொல்லிற் பாஷிக்கவே—பாதாம்புயந்தன்னைபூசிக்கவே
கோலாகலமாக நேசிக்கவே—குகானந்தயிச்சபை யேமெய்க்கவே()

நாமகள்.—

தந்தேன்வரம் மனமேகுளிரச்—சந்ததமோங்கும் புகழ்வளரக்
கந்தன்கருணை மிகுமகிழக்—கல்விபெருகுஞ் சபைதிகழ ()

சூத்ரதார்.—ஹே புஸ்தகபாணி! தவளபூஷணி! நின்னருட்பெற திருவடி போற்றினேன் கருணைபுரிவாயாக.

நாமகள்.—தனைய! அவ்வண்ணமே பெறுக.

[நாமகள் மறைதல்.]

ஸீன் 1.

இடம்:—நம்பிராஜன் தர்பார்.

நம்பிராஜன் மந்திரி பிரதானிகளுடன் கொலுவீற்றிருத்தல்.

நம்பிராஜன்:—

(ஓ தீருநல்லூர் என்ற மெட்டு.)

நற்றவஞ்சேர் சிற்றூரதை யாளும்—நம்பி
ராஜனெந்தன் பேரதுவாம் நாளும்—கந்தன்
நளினமலர்த் தாளிணையே கோரும்—வேட
ஞர்குலத்தி லேயுதித்து நாகரீக மேமிகுத்த (ந)

அன்பர்க்கரு ளன்பனுப காரன்—பொல்லா
வம்பரைவென் றூர்க்குமதி வீரன்—செங்கோல்
மீாட்சிதவ றாதியற்று தீரன்—இந்த
மாநிலமெல் லாம்மதிக்கும் வானவருமேதுதிக்கும் (ந)

மந்திரியே! தேசவிசாரணை செய்யக்கருதினேன் நின்னுளம்?

மந்திரி.—சித்தமொப்பச் செப்புவேன் ஐய.

(மற்றுப்பற்றேன என்ற மெட்டு.)

ந.—மந்திரியேநம தாட்சியின்வளம் வழுத்துவாய்நிறைவண்ணமே
வாஞ்சையாகினேன் ஓதுவாயிந்த மாசபையதின்முன்னமே (ம)

ம.—யாதுமேகுறை யில்லையே தமதாக்ஷியே யரசாக்ஷியே
ஐயனேபுகழ் மெய்யனே மலர்க்கையனே மிகமாக்ஷியே (யா)

ந.—சீர்வளர்ந்திட வான்பொழிந்துசெ ழித்திருக்குதோ தேசமே
தேவருக்கறு காலபூஜைகள் திகழுதோபிர காசமே (ம)

ம.—ஆகமப்படி யேதினப்படி ஆகுதேபூசை நாளுமே
அண்ணலே யறுகாலமுந்தவ றாமலேயின்னுங் கேளுமே (யா)

ந.—குடிகள்யாவரும் நூல்விதிப்படி நடப்பதிற்குறை யில்லையே
குவலயந்தனி லேதிருப்பினும் யாவுமென்முனம் சொல்லையே(ம)

நம்பிராஜன்:—மந்த்ரீ! நம் அரசாக்ஷியில் குறைவொன்று மில்லாது யாவுஞ் சீர்பெற நடைபெறுகின்றதா?

மந்திரி:—அரசே ஒன்றும் குறைவில்லை.

நம்பிராஜன்:—மந்த்ரீ! வேட்டைக்குச் செல்லவேண்டிய தாயத்தஞ் செய்க.

மந்திரி:—அங்கனமே.

ஸீன் 2.

இடம்:—கானகம்.

நம்பிராஜன், வேடர்கள் முதலியோர் வேட்டையாடுகின்றார்கள்.

நம்பிராஜன்.—

(சிரிக்க சிரிக்க என்ற மெட்டு)

திடபுஜபலமிகுவேடர்களே திறமலிகணைவிடுசூரர்களே
திரள்திரளாகவே வருவீர்களே நாளும்
ஜெயம்ஜெயமெனப்பலன் பெறுவீர்களே (தி)

கத்திதுப்பாக்கி நல்முனையீட்டி—கதிரொளிமிகர நன்றாய்த்தீட்டி
அத்திரம்யாவு மொன்றாய்க்கூட்டி—அடர்வனவேட்டையிற்றிறங்
காட்டி ()

வேடர்காள்! வனத்திடை சென்று துட்ட மிருகங்களை விரைவில் ஒழித்து வருவீர்கள்.

வேடர்கள்.—ஆக்ஞையின்படியே யண்ணலே. (செல்கின்றார்கள்)

[நம்பிராஜனும் அமைச்சனும் தனித்து ஓரிடத்தில் களைப்பாறுகிறார்கள்.]

நம்பிராஜன்.—மந்திரி! இன்று என்னே பல நற்சகுனங் காணுதல்?

மந்திரி.—விரைவில் களிபேருவகையெய்தக் காந்தனருளே!

[வேடர்கள் திரும்பி வருகின்றார்கள்.]

வேட —அரசே! என்ன ஆச்சரியம்! அதோ வள்ளிக்கொடியருகில் ஓர் அழகிய பெண் குழந்தை.

[அதிவேகமாக அரசனு மமைச்சனும் குழந்தையை நாடிச் செல்கின்றனர்]

நம்பிராஜன்.—ஆ முருகா! நின்பாக்யமே.

(கல்யாணி—ரூபகம்.)

என்னபாக்யம் செய்தேன் சொன்னம்போலிங்கு
இலங்குமணியைப் பெறவே
அன்னவாகனமேறும் அயனும்படைத்தறியா
அழகுநிறைந்தொளிருங் குழவியிதனைக்காண (எ)
செந்தாமரையில்வளர் தேவிலெட்சுமிதானோ
சிவனாரிடப்பாகஞ்சேர் செல்விபார்வதிதானோ
சிந்தாகுலம் தீர்க்கும் வெண்டாமரைமானோ
சித்தங்களித்திடவே முத்தய்யனே தந்தானோ (எ)

அமைச்சே! என்ன ஆச்சர்யம்! என்ன லாவண்யம்! இதனெழிலுக்கு இணையேது முண்டோ?

ம —அண்ணலே! நம் மனதில் வெகுநாட்கொண்ட பெருந்துயர் அகலவே இந்நவமணியை நம்மீசன் நல்கினன்போலும்.

[அதிக மகிழ்ச்சியுடன் இன்னிசை பல முழங்கச் சேயைப்பெற்று நம்பி ராஜன் மனை செல்கின்ருன். அங்கு நம்பிராஜனும் நங்கை மோகினியும் சேயை நோக்கி முத்தமிட்டு, உச்சி மோந்து அளவிலா ஆனந்தமுற்று வள்ளியெனத் திருநாமமிட்டு அன் பாய் வளர்க்கின்ருர்கள். வள்ளி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து தக்க பருவம்பெற்று வருகின்றனள்.]

ஸீன் 3.

இடம்.—நம்பிராஜன் தர்பார்.

நம்பிராஜன், மந்திரி முதலானேர் வீற்றிருக்கின்ருர்கள்.

வேடனெருவன் வருகிருன்.

நம்பிராஜன்.—என்ன அதிவேகம்?

வேடன்—அண்ணலே! தினைப்புனங் காவல்செய்தும் பயனுள்ள தாக இல்லை. காவலுக்குச் செல்பவரும் மிகுந்த துயருறுகின் றனர்.

நம்பிராஜன்—சரி. நீ செல்வாய். (மந்திரியை நோக்கி) மந்திரீ!

என்ன ஆச்சரியம்! தினைப்புனங்காவலுக்குச் செல்பவர் எல்லாம் துயருறுதலும் விளைவு பயனிலாதுபோதலும்?

மந்திரி—மகிப! நம்குல முறை தவறியதேயாம்.

நம்பிராஜன்—ஆம் முற்றிலும் மறந்தேன்.

[நம்பிராஜன் மைந்தனெருவனை நோக்கி வள்ளியை அழைத்துவரச்சொல்ல வள்ளி வருகின்ருள்.]

(மாத்தாடபாராதேனே என்ற மெட்டு.)

ந.—வருவாய்என்கண்மணியே வள்ளிமணியே
திருவாய்விளங்கெழுந்த செல்வச்சிரோமணியே (வ)

வ.—தந்தையேநின்தாளிணைக்கு வந்தனந்தந்தேன்
சிந்தைமகிழும்வண்ணம் எந்தனையேயழைத்த (த)

ந.—நம்ஜாதிமுறைப்படியே மடப்பிடியே
மிஞ்சும் தினைப்புனமே மேவிக்காப்பதினமே
கொஞ்சுங்கிளியன்னமே கோகிலமே சொன்னமே (வ)

வ:—ஆஹா தம்சொற்படியே புனம்நாடியே
வாகாய்க்கார்ப்பேனேடியே வருவார்சேடிகோடியே
வாழ்த்தும்புகழ்கூடியே வளரும்படிப்பாடியே (ஆ)

தந்தையே நமஸ்கரிக்கின்றேன். இங்கென்னையழைத்தது--

நம்பிராஜன்—கண்மணீ! நம்குல முறைப்படி தினைப்புனங்காவல் செய்ய உன்னை ஆங்கனுப்ப எண்ணி உன்னை யிங்கழைத்தேன்.

வள்ளி—ஐயனே! சொற்படிசெய்வேன்.

ஸீன் 4.

இடம்.—தினைப்புனம்.

சேடிகளுடன் வள்ளி தினைப்புனம் வருகிறுள்.

வள்ளி.—

(கல்யாணி—ரூபகம்)

வாரும் வாருமே தோகைமாமயில் சாயல்நேர் மாமணிகாளோடி (வா)

சீருடனேவிளை தினைக்கதிர்தேடி
சிறகடித்தேவரும் பறவையைநாடி
சேதம்வராமல் கவணெறிகூடி
சிந்தைமகிழ்ந்தின்புறநம் தேவனைக்கொண்டாடி (வா)

கிள்ளைகுயில்காடை புள்ளினக்கூட்டம்
கேட்குதுபாரங்கே என்னஆர்ப்பாட்டம்
துள்ளிவருமெழில் மான்களினூட்டம்
சொல்லவொண்ணுக்காட்சியதே யென்னடிகொண்டாட்டம்(வா)

சேடிகாள்! பார்த்தீர்களா! என்னஅழகு இக்காட்சி! வாருங்கள் பரணுக்குச்செல்லுவோம்.

(ஆலோலம்)

ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
ஆலோலம் ஆலோலம் அரும்பறவைக்கூட்டங்களா சோ! சோ! சோ!

சகியே! என்னவிந்தை! இப்பட்சிகளெல்லாம் கதிர்களையணுகாது நம்மையே பார்த்திருத்தல்?

சகி—அம்மணி! நின்னிசையில் மகிழ்ந்தே.

வள்ளி—சகி! என்னடி என்மனம் ஒருபால் துன்பமும், ஒருபால் இன்பமு முறுகின்றது. நற்சகுனமும் காண்கின்றது.

சகி—யாவும் நற்காலத்திற்கே.

[வள்ளி தனியே நின்று, தான் கனவில் கண்ட முருகன் எப்போதருள்புரிவா ரோவென்று கூறிக்கொண் டிருக்க, நாரதர் பிரவேசிக்கின்றார்.]

நாரதர்.—

(கலிலோ என்ற மெட்டு)

நானேநாரதனென நானிலம் நவிலுமோர் மாமுனியே வந்தேனிங்கு()
மானேர்விழிவள்ளிதிருமணமே மகிழ்ந்துவேலவன்றனக்கே முடிக்க வந்தேன்(நா)

நிதமொருகலகம தேனுஞ்செய்யாவிடில் நேருமென் றலைவெடிக்கும்
நேர்ந்தசாபம்தந்தை யீந்ததாகிலும்நிச் சயம்பலன்கிடைக்கும்
நிகராரேசபதமேமுடிக்கும் நீதன்கோபாலன்சொல்லனுதினம்நினைக்கும்()

இவ்வெழிற்பெருங் கன்னியை எம்பெருமான் முருகனுக்கே விவாகமுடிப்பேன். சென்று பார்க்கின்றேன் மாதினுளம் இன்னதென்று.

[சேடியருடன் வள்ளி நாரதர்முன்வருகின்றாள்.]

(பிலஹரி—ரூபகம்.)

வ.—சரணம் சரணமய்யா ஸ்வாமிநாரதமகா முனியே
தஞ்சமுன்பா தாரவிந்தம் தந்தருள்புரிகுவீர் மாமுனியே]

நா.—மங்களம் மதிவதன மங்கையர் சிகாமணியே வள்ளி
மாமுருக வேலனருள் வாய்ந்திடும்ஜெயமுனக்கே வள்ளி

வ.—நங்கையென்னைநாடியின்று இங்குவந்த தென்னவிந்தை முனியே
நல்லதவம் என்னசெய்தேன் நவிலுவீர் கிருபைசெய்து இனியே

நா.—சங்கதிவே றொன்றுமில்லை தக்கபரு வத்தில்வள்ளி தனியே
சாற்றுமின்ப மேபெறாமல் தானிருப்ப தென்னவிந்தை கனியே

வ.—சேடியரு டனேயிந்தத் தினைப்புனங் காப்பதேயின்பம் முனியே
செப்பவேறுமுண்டோயிதுங் கீடிராதென்றேசொல்வேன்முனியே

நா.—யாவுமே தெரிந்ததுபோல் பேசினுயெந்தன்முன்னேநீ வள்ளி
அழகுக்கேற்ற நாயகனை அணைவதல்லோ இன்பமாகும் வள்ளி

வள்ளி—முனீசுவரரே! சரண்.

நாரதர்—மங்களமுண்டாகுக.

வள்ளி—இவண் வந்ததென்ன பாக்யம்?

நாரதர்—பெண்மணி! நின் இன்னிசைகேட்டு இவண் அணுகினேன். இப்பருவத்துநீ தனித்திருப்பது என்னே? தக்கநாயகனை மணந்து சுகிக்குங்காலமன்றோ?

வள்ளி—முனிவ! ஈதென்! தாம்வந்த திதற்கோ?

நாரதர்—ஆம். அதற்கென்ன ஐயம். அழகுமிக்க உனக்கு இன்னும் கடிமணம் ஆகாதிருத்தல் அறமோ! நின்பெற்றோர் அறியார் போலும்.

வள்ளி—முனிவ! தங்களுக்கேன் கவலை?

(பாளையவாய்கமழில் என்ற மெட்டு)

வ.—நல்லசேதிசொல்லவந்தீர் நாரதமகாமுனியே
நங்கையெனக்கேற்காதிந்த வார்த்தையே—வேறு
நவிலுவீர்உமக்கென்னுளுங் கீர்த்தியே

நா.—நானிலத்திற்கேற்றிடுஞ் சொல் நங்கையே யேற்காதென்றால்
ஞாயமோசித்திரமட வன்னமே—நல்ல
நாதனைக்கூடியணைவாய் சொன்னமே

வ.—போதும்போதுமிந்தபேச்சு பூவைமுன்னிற்காமல் போம் போம்
போதமிக்க மாமுனிசிரேட்டரே—இந்த
போதனையேறாதுவெறும் பாட்டிலே

நா.—எந்தவிதமாகிலும் விவாகமதைக் கந்தனுக்கே
சந்தோஷமதாய் முடிப்பேன் கூட்டியே—இது
ஸத்தியமாம் எந்தன்வீணை மீட்டியே

வள்ளி! மணத்தைவெறுப்பது தகுமோ? நின்மனதுக்கேற்ற நாயகன் அந்தக்கந்தனேயாவன். அக்கந்தனுக்கே நான் உன்னை மாலை சூட்டிவைப்பேன். என் சபதம் வீணாகுமோ? அக்கந்தன் பெருமையை நீயறியாய்! ஆதலால் மணத்திற் கிணங்கவில்லை. தெரிந்தால் இதுகாறும் இணங்கியிருப்பாய். சொல்கிறேன் கேள்.

(முருகன் திருமால் மருகன் என்ற மெட்டு)

நானே சொல்லுவேன் முருகன் பெருமை
சேடன் நாவாயிரத்தாலும் கூறவொண்ணு அருமை
மானே உனக்கேற்றநல் லுரிமை
மகிழ்வுற்றிட புகழ்பெற்றிட வருவெற்றிநல் மணமுற்றிட (நா)
வானவரேத்திடும் மோனமுணர்த்தும்வி வேகன் மகிழ்யோகன்—திகழ்
மாமயில்வாகனன் யூகன்பரிமள மன்னுமெழிற் றேகன்
தானவரைத்துலைத் தாளு மனுபோகன்
சந்ததமுந்தன்பா லென்று மதிமோகன்
பானல்விழிதெய்வ யானை யின்பாகன்
பரவுந்தமிழ்பாடும் கோபாலன் சொல்வாகன் (நா)

இத்தகைய அரும்புகழ்வாய்ந்த வேலவனை மாலைசூட்ட நின் மனம் இயையாததென்ன ஆச்சரியம் வள்ளி!

வள்ளி-வீண்வம்பு ஏன் செய்கிறீர்? தாங்கள் இவ்வனம்விட்டுச் செல்வதே நலம்.

நாரதர்.—நிச்சயமாகச் சம்மதமில்லையா? சற்று யோசித்துச்சொல்.

வள்ளி.—முனிவரே! ஒரே சொல்லன்றிப் பலவுமுண்டோ?

நாரதர்.—அவ்வண்ணமா சரி. இதோ சென்று என் எண்ணம் விரைவில் முடிக்கின்றேன். காண்பாய் விரைவில். (செல்லுகின்றார்) (ஓர் புறத்தில் சற்றுக்கவலையுடன் தனிமையாக) கந்தன் என் எண்ணத்தை பூர்த்திசெய்து வைக்கின்றனனே அல்லது எவ்வாறு ஆகுமோ தெரிகிலேன். வள்ளியின் குலத்தைக் கேட்டால் மணத்திற்கு மனமிசையாவிடில் என்சபதம் என்னுவது? தெய்வயானையை மணங்கொண்டபின் இதற்கும் மனம் பொருந்துமோ? என்னமோ முன்பின் ஆலோசியாது சபதங்கூறினேன். என்னே என்மதி? ஆயினும் களங்கமில்லேன். என்மனம் போலவே காரியம் நடைபெறும். முருகனே துணை.

ஸீன் 5.

இடம்.—கழுகுமலை.

சுப்ரமண்யர் ஆறுமுகத்துடனும் பன்னிருகையுடனும் கழுகுமலையில் வீற்றிருக்கிறார்.

ஆறுமுகம்.— (நானேயழைத்துவருவேன் என்ற மெட்டு)

ஆறுமுகவேலனான் அன்பருக்கருள் (ஆ)
பாரோர்புகழ்சேர்கிரிப் பதிதனில்மேவிய
பரமனருளுஞ்சுதன் அரிமருகன்கண
பதிதனக்கிளையவன் மாமயில்வாகன (ஆ)

[நாரதர் பிரவேசம்]

நாரதர்.—

(நாதவிந்து என்றமெட்டு)

ஆதியந்தமிலாதமூலாதர—வேதமந்த்ரசொரூபா ஆரூதர
மோனநாதவடிவான குகாபர—குமரேசா

ஜாதிபேதமிலாதகுணகர—நீதபோததவமேகருணகர
ஸ்வாமிநாதமணியேப்ரபுடீகர—குருநாதா

பாதிமதிமுடிசூடுங்கங்காதர—பூதனதன்சுதனனபஹேஹர
ஞானபண்டிதேவதராதல—முறைவேலா

வேதிசூழுமுயர்சேர்கிரிவாஸ-விஸ்வாஸமால்மரு கா அருள்தாகவி
ஓதும்தாஸன்கோபாலன் தினம்பணி—பெருமாளே.

ப்ரபோ! நமஸ்கரிக்கின்றேன்.

ஆறுமுகம்.—வாரும் வாரும் நாரதரே. ஏதேது விந்தை! யிவண் தாங்கள் வர வென்ன? நற்காலம். பேஷ். என்ன விசேடமிங்கு வந்ததோ? காரியமொன்றுமில்லாமல் வரமாட்டீர்கள். முகத்தில் சந்தோஷக்குறி தோற்றுகிறதே!

நாரதர்.-கோரியகாரியம் நிறைவேற வரம் ஒன்று அருளல்வேண்டும்.

ஆறுமுகம்.—அங்கனமேயாகுக!

(ஜோர் ஜோர் என்ற மெட்டு.)

வாரும் வாரும் நாரதரே வந்ததென்ன சொல்லுவீர்
வந்ததென்ன சொல்லுவீர் உகந்ததென்ன சொல்லுவீர் (வா)

நா.—பார்புகழும் வேலவா ஓர்பைங்கனி கண்டேன்
பார்த்ததில்லை பாரின்மீது வாய்த்ததே நன்றே (பா)

ஆ.—சிலாக்யமென்ன மாமுனிநீர் செப்பிடுங் கனிக்கே
சிந்தைமகிழ்ந் தேபெருமை செப்புவீ ரெனக்கே (வா)

நா.—கண்டபோதே சுவைமிக்கூட்டும் காதலாங் கனியே
கந்தனே யிசைந்திப்போதே கைக்கொள்ளுவீர் கனியே (பா)

ஆ.—இருப்பதெங்கே நாரதரே ஏத்திடுங்கனியே
இனிதுசெல்லு மார்க்கமென்ன இயம்புவீ ரினியே (வா)

நா.—தினைப்புனத்திற் செழித்திருக்குஞ் சீர்பெருங் கனியே
தேவரும் பெறவொண்ணுது தெளிகுவா யினியே (பா)

ஆ.—நாரதமுனியே கனிக்குப் பெருமைமிக்க தேஆயினும்
அதென்கைக் கசப்படுமோ வென்றசந்தேகந் தானொன்று(வா)

(கலித்துறை.)

நா.—உண்டால் ருசிக்குங் கனி யுண்டுலகி லுவந்திடக்கண்
கன்டால் ருசிக்குங் கனி காண்பரிதெக் கடவுளருங்
அண்டாக் கனிதீதணுகாக் கனியத்தினைப் புனத்திற்
கண்டே னொருகனி நின்பாற் களிக்கக் கனிந்தருளே

குகனே! அக்கனி நீ பெறவே யேற்றதல்லால் வேறு யார்க்குங் கிட்டுதலறிது.

(பஹாரியாலா என்ற மெட்டு.)

ஆ.—பக்ஷிகள்கண்டால் அதை பட்சித்திடாதோ
பாவையர்கண்பட்டாலவர்க்கென்னகிடைக்காதோ
பாங்குடனுரைப்பதெல்லாம்மிகச்சூதோ ஏதோ நாரதரே (ப)

நா.—கண்டுறவாடுஞ் சுற்றிக் கனியதைக்கூடும்
கள்ளர்யாருங்கைக்கொள்ளாது காத்தருகில்நீடும்
கனிமகிழப் பலவிசைகள்பாடும் ஆடும் பக்ஷிக்கூட்டமெல்லாம் (க)

ஆ:--ஈதென்னவிந்தை குறி காணிலென்மாதோ
எந்தன்முன்னியம்புதலால் என்னபெருந்தீதோ
எண்ணமெல்லாம்போகுதங்கே இனிவாதோ சூதோ நாரதரே (ப)

நா:--சிங்காரமான மட மாதேமாதே
தேவனேயுனக்குகந்த தேவியாமிப்போதே
செப்பினேனுள்ளதுகண்டுயினிமீதே யிதில் பேதமெண்ணாதே()

குகனே! அப்பெண்மணியினழகையும் குணத்தையும் எவ்வாறு புகழ்வது? ஆயினும் கூறுவல்.

(பத்யம் ஆனந்தபைரவி)

பாலினுமுயர்ந்தமொழி சேலினுமுயர்ந்தவிழி
பந்தினுமுயர்ந்ததன மிந்துவதனம்
ஞாலமிசையன்னநடை நூலினொடுமின்னலிடை
நாண்கொண்டவில்லுருவம் நாண்கொள்புருவம்
ஆலிலையைநேருதரம் அம்பவளநேரதரம்
ஆசைதரும்வாய்குமுதம் நேசமமுதம்
நீலமுகில்நேரளகம் நினைக்கிலுண்டாம்புளகம்
நிமலமிகுதாளநகை கமலமிருகை
நிகரற்றமங்கையவ ளழகைநேராய்
நிமலனேகண்டுமகிழ் வாயேசீராய்
பகரவென்னாலரிது பருவம்வாராய்
பணிந்தேன்நின்பாதமலர் வந்துகாராய்.

ஆறுமுகம்:—சரி. நாரதப்பிரம்மமே! எவ்வகையினும் அக்கண்மணியைப் பெறுவேன். இதில் ஐயமில்லை. ஆயினும் அப்பெண்மணி யாரெனத் தெரிகிலேன்.

நாரதர்.—(தனிமையாய்) ஓஹோ! மோசம்வந்ததே! குறக் குலமென்று சொன்னால் இகழ்ந்து விடுவரோ! நெஞ்சே ஏன் தடுமாறுகின்றாய்! காரியம் நிறைவேற வரம் ஒன்றுளதே.

(மௌனம்)

ஆறுமுகம்.—முனீஸ்வரரே! என்ன யோசனை?

வெண்பா.

நாரதர்.—சிற்றாராள் நம்பிதவச் செல்வி குறப்பாவை
பெற்றாள்வா யெந்நாளும் பேணியே—பற்றாகக்
கந்தாநின் பாதமலர் கண்டே னுளமகிழச்
சிந்தா குலமகலச் செய்.

நம்பிதந்தமான் நாதனே,

ஆறுமுகம்.—பேஷ்.

நாரதர்.—ப்ரபோ! ஒன்று வேண்டுகின்றேன்.

ஆறுமுகம்.—யாது?

நாரதர்.—இச்சண்முக உருவ மாறி, வேட வுருவங்கொண்டு செல்ல இறைஞ்சுகின்றேன்.

ஆறுமுகம்.—ஆங்கே செல்கின்றேன். விரைவில் மணக்கோலக் காட்சி பெறுவீர். சென்றுவாருங்கள்.

ஸீன் 6.

இடம்.—தினைப்புனம்.

வள்ளி ஆலோலம் பாடுகிறாள். சுப்ரமண்யர் வேட உருவத்துடன் வருகின்றார்.

வள்ளி.—

ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
ஆலோலம் ஆலோலம் அரும்பறவைக்கூட்டங்களா சோ! சோ! சோ!

சுப்ரமண்யர்—(ஓர்புறமாய்)

(துலங்குசெம்பொன் என்ற மெட்டு.)

இலங்குமித்தினைப் புனமதில்மேவிடுமிவளே யெனக்கிசைந்த
இன்பரஞ்சித வல்லியே நாரதர்சொன்ன
படியேயிணங்கு மெல்லியே
இதமுடன்குயிலென விசையதுகூட்டுறாள்
எழிலுடனேகவணெறிந்தாயலோட்டுறாள்
ஏனோஎந்தனைப்பார்க்குறாள் பரணிருந்து
இப்புனந்தன்னைக் காக்குறாள் (இ)

இத்தரையிலிவட்கிணை யெவர்சொல்லப்போமோ
இதமுடனிவளுடன் நேசமுண்டாமோ
ஏகாந்தமானசேவையே யினிப்பொறுக்கேன்
ஆகா அம்மாரன்பூவையே (இ)

சரிதான்! இத்தகைய எழிலுறும்பெண்ணை எவர்தான்புகழார்? நாரதர் சாமான்யரைப்பற்றி புகழ்வரோ? என்ன மந்தகாசம்! எனக்கென்றே அயன் படைத்து இவணனுப்பினன்போலும்! ஏ மன்மதா! என்னை வருத்தாதே, மிகவும் உன்னை வேண்டுகின்றேன்.

(ஓடிப்பதம்.)

ஜோதிசுந்தரரூபவல்லி சொகுஸானமெல்லி (ஜோ)

மேதினிதனிலிவளேயெழில்மாது
விளம்பிடநிகரெவருங்கிடையாது
தீதிலாத்தவமிகச்செய்ததிப்போது
சித்தித்ததெனக்குமேகாணவிப்போது (ஜோ)

தோகைமயிலெனவுலாவி—யிப்புனந்தனில்
தோழிமார்பலருடன்மேவி—கவணெறிந்து
சோசோவென்றாலோலமேகூவிச்—சுகித்திருக்கும்
சுகிர்தமின்னிவளேயென் ஆவி—புகழ்சஞ்சீவி
தோத்திரமாயிவள் கீர்த்தியுரைப்பதேபாக்யம்-- இன்றேமணந்து
சுகித்துப் பலவித கலவி தொடுப்பதே சிலாக்கியம்-எனக்கிசைந்த
தூயவினோதசல் லாபஉல்லாசநல்யோக்யம்—மதிமுகத்தாள்
துடியிடைபிடிநடை கடிமலரணிசடை மின்னாள்--யாவரும்போற்றும்
சுமுகரஞ்சிதநய அரியவசனமொழிப்பொன்னாள்--மிகமணக்குஞ்
சுகந்தப்பரிமளவொய்யாரி சுழலுங்கயற்கண்ணாள்— இவளேகெதி
துதித்திடுவேனினி யிவள்திருப்பேரே
சொன்னதுசரிசரி முனியெந்தன்நேரே
மதித்திடுங்கோபாலன் தமிழ்கவிசீரே
வழுத்தினேன்மணம்பெற வல்லியைநேரே (ஜோ)

கிள்ளை முதலிய புள்ளினமெல்லாம் இவளினிய குரல்கேட்டு இரையும் மறந்திருப்பதென்றால் இவனென்செய்யும்? ஆ! வந்தவேலை மறந்தேன். நெஞ்சே சற்றுப்பதறாதே. விரைவில் களிப்பெய்து வாய். நாமிம்மாதிடஞ்சென்று உரையாடுவதற்கு ஓர் வழி தேட வேண்டும். மானொன்றைத்துரத்திவந்து அதைக்காணாது தேடுவ தொப்பச்சென்று என்னெண்ணம் முடித்துக்கொள்ளுகிறேன்.

[வேட உருவங் கொண்ட சுப்ரமணியர்
வள்ளியின் அருகே செல்கின்றார்.]

(மார்க்கத்தில்கண்டகனி என்றமெட்டு.)

வே.-மானொன்றுஎன்சணை தப்பிஓடிவந்ததேயிங்குஎங்குசொல்லும்

வ.—மார்க்கத்திலேஎந்த மானும்வரவில்லை வந்தவழியேசெல்லும்

வே:-வர்தமானில்லையென் றங்கமாய்ச்சொல்லிடில் எந்தன்மான்போன [தெங்கே

வ.—வம்புக்குவந்தவ ராகவேதோணுது அந்தமான்வல்லையிங்கே

வே.-இல்லைஇல்லையென்றென் மானைப்பிடித்துநீ ரெவ்விடங்கொண் [டொளித்தீர்

வ.—எதுக்குக்காணும் மானையொளிப்பது ஈதென்னவீண்பழித்தீர்

வே.-நான்தேடுமானெங்கு மோடாதுவேறிடம் ஞாயமில்லைதருவீர்

வ.—நல்லவார்த்தையாகச்சொன்னாலுங்கேளாமலேன்வாதமேபுரிவீர்

(குறத்திதந்தமாத்திரை என்றமெட்டு)

வேடன்.	வள்ளி.
மங்கையே மடமானே	இங்குவல்லைதானே
எங்குபோகுமானே	என்னநான் செய்வேனே
சொன்னாலும் விட்டுப்போமோ	சும்மாவுங்கேட்கலாமோ
என்னாசைமான்வேறாமோ	என்னசெய்பலாமோ
செய்வதென்னசாட்டு	செல்லென்சொல்லைக்கேட்டு
அய்யோமாரன்வாட்டு	அறிகுவாய்பின்பாட்டு
அணையநல்லவாரம்	அடாதுசெல்நீதூரம்
பழகினாலொய்யாரம்	பகர்வதென்னவீரம்

(கலித்துறை.)

வே.-மேயாதமான் புள்ளிமேவாதமா னிங்குவிரைந்துபற்றச்
சாயாதமா னிருகொம்பேற்றமா னித்தரணிதனிற்
றோயாதமான் சுளிதோணாதமான் வலைச்சூழ்ச்சியிற்போய்
பாயாதமா னென்மனங்கொண்ட மானதுபைங்கிளியே.

தயவுசெய்து என் மானை விட்டுவிடு.

வள்ளி.—வேடரே! மான் ஒன்றும் இங்குவரவில்லை. வழியே செல்லுவீர். மரியாதையல்ல.

(தொட்டுஇழுக்காமல்போவேனோ என்ற மெட்டு.)

வே -வீரனுக்குமதிவீரனடி உன்னை மேவுதற்குநல்லமாரனடி
தீரனுக்குமதிதீரனடி எந்தன் சேதிதெரியாமல்வாதேனடி (வீ)

வ.-ஜம்பமாய்நீபேசினாலுமே யெண்ணந்தான்மாறுமோயெந்நாளுமே
வம்பினாலாவதென்சாரமே இனி வருவதற்கண்ணமார்நேரமே ()

வே.-எண்ணமுடிக்காமல்போவேனோ போனால் என்றைக்கும்நான்வீரனோ [வேனோ
அண்ணாருக்கென்னநான்தோற்பேனோ உன்னை யணையாமல் மற்றெ [தும் பார்ப்பேனோ (வீ)

வ.-மிஞ்சினவார்த்தைகள்சொல்லாதே யிங்கு வீண்மதங்கூறிநீநில்லாதே
அஞ்சிடேனென்குலம்பொல்லாதேஐயாஉன்கையெல்லாம்செல்லாதே

வேடன்:—அழகிற்சிறந்த மின்னே! அணங்கன் வாளிக்கு வீணிலென்னை யிரையாக்காதே. அன்போடென்னை மணந்து இன்பம் பெறுவாய். வாணாளை வீணாளாக்காதே. தக்கநாயகனை மணப்ப தன்றோ தையலாக்கேற்றது. நான் நின்னெழிலுக்கேற்ற நாயக னல்லவோ? என பல யோசனை? இன்றேயிணங்குவாய். நின் னின்பம் பெறாதிவன் போவனென்றெண்ணாதே. யாவருக்கும் அஞ்சா ஆண்பிள்ளைச் சிங்கம் என் திறம் நீ யறியாய். என் மனம் மகிழ ஓர் வார்த்தை சொல்வாய்.

வள்ளி:—வேட! இதுமுறையோ? இதுதகுமோ? யாரென வெண்ணினாய்? வீணிற்புலம்புகிறாய். சற்றும் முன் பின் பாராது வந்தவாறெல்லாம் மொழிதல் சரியன்று. மரியாதையாக நடந்துவிடு. மானென்றுந் தேனென்றும் கூறுவதாற் பயனில்லை. என் அண்ணன்மார் இதோ வருவார்கள். வரின் நின் ஆயுள் ஒழியும். விரைவில் சென்றுவிடு. (ஓர்புறமாய்)
அண்ணா! அண்ணா! [வள்ளி அண்ணன்மாரையழைக்க அவரெழுவரும் வருகிறார்கள். வேடன் வேங்கைமரமாக மாறுகிறான்.]

அண்ணன்மார்:—

(கருணைதந்தருள் ராகவா என்ற மெட்டு.)

பார்த்துவருவோம்வாரீர் பாங்குடனின்று (பா)

கோர்த்தகடம்பணியும் குமரனைப்பாடியே
கோர்லகலமாய்நாமெல்லோருமொன்றாய்க்கூடியே (பா)

முருகனருளால்பெற்ற முக்கனியின்ரசத்தை
மோகனரஞ்சிதமுத்தை கிள்ளையினத்தை
திருவாரும்மிக்கவளம் சேருந்தினைப்புனத்தைச்
சேதம்வராமல்கார்க்கும் செல்விவள்ளியனத்தைப் (பா)

வள்ளி.—அண்ணன்மார்களே! நமஸ்கரிக்கின்றேன்.

அண்ணன்:—மிக்க ஆயுள் பெருக. தங்காய்! இப்புனமிருத்தல் நின்மனதிற் கெவ்வாறுளது?

வள்ளி.—மிகுந்த ரம்யமாகவே யிருக்கின்றது அண்ணா!

அண்ணன்.—என்ன ஆச்சரியம்! தினையுஞ் செழித்திருக்கின்றது. பட்சியினத்தாலுஞ் சேதமேயில்லை. குலமுறை தவறியதாலன்றோ முன்பு இடுக்கண் பலவுற்றது. பெரியோரிட்ட கட்டளை மாறாதிருப்பதே நலமென்பது இதனால் நன்குபுலனாகிவிட்டது.

[சுற்றிப்பார்க்கிறார்கள். புதிதாக வளர்ந்துள்ள வேங்கை மரத்தைக்கண்டு அதை வெட்டச் செல்கிறார்கள்.]

(பார்க்கிற பார்வையிலே என்ற மெட்டு.)

இதுவரையில்லாத வேங்கைமரமிங்கு எழுந்தது என்ன விந்தையே
—ஏதே—சூதே (இ)

அதிவிரைவினில்நம் மாயுதங்கொண்டிதை அப்புறப்படுத்துவீரே—
நீரே—சீரே (இ)

சற்றுப்பொறும்பொறு மூச்சத்தில்கவுளியும் சாற்றிடுஞ் சொல்
கேட்போம்—கேட்போம்—பார்ப்போம் (இ)

தருநிழலிதுமிகத் தருவதனாலிதைத் தகர்வதையே நிறுத்தும்
—நீரே—சீரே (இ)

வள்ளிமணியே! ஈதேதுவிந்தை! இவ்வேங்கைமரம் இதுகாறுமில்லையே! இதனைப் பிளந்தெறிவோம்.

மற்றொருவன்.—இம்மரம் நம் தங்கைக்குக் குளிர்நிழல் தருவதாக விருத்தலோடு கௌளி சொல்லுகின்றபடியால் இதை வெட்டுதல் கூடாது. வாருங்கள் பதி செல்லுவோம்.

அண்ணன்.—ஆனால்சரி. கண்மணி! நாங்கள் சென்றுவருகின்றோம். ஜாக்ரதையாயிருந்துகொண்டிரு.

வள்ளி.—ஆகட்டும் அண்ணா! சென்றுவாருங்கள். அவசியமுற்றால் அழைப்பேன், தாமதியாமல் வந்துதவுங்கள்.

[எல்லோரும் செல்கின்றனர்.]

(தனிமையாக) ஈதென்ன ஆச்சரியம்! இங்கு வந்து என்னைத் தொந்தரை செய்த வேடன், என் அண்ணன்மார்களைக் கண்ட வுடன், எங்கோ மாயமாய் மறைந்தான்? அம்மம்ம! அவனிடத்தில் நான்பட்ட கஷ்டம் போதும் போதும்! மானும், தேனும், என்னென்னவோ உளறினன். என் அண்ணன்மார்கள் வர இன்னும் சிறிது நேரம் தாமதித்திருப்பார்களாயின், அவ் வேடன் என்னைப் பலாத்காரஞ்செய்தேயிருப்பான். நல்லவேளை. சனி ஒழிந்தது. ஆனல், இவ்வுலகத்தில், இன்பமும் துன்பமும் ஒன்றையொன்று அடுத்தடுத்தே வந்துகொண்டிருக்கின்றன வென்று பெரியோர்கள் சொன்ன வாக்கியம் இப்பொழுது மெய்யாயிற்று. வேடனிடத்தில் அவஸ்தைப்பட்ட எனக்கு, அவ்வேடன் நின்றிருந்த இடத்தில் ஒரு புதிய வேங்கைமரம் உண்டாகி, அதன் நிழலில் இருக்கும்படியான சுகத்தை நான் பெற்றேன். ஆனல் இப்பொழுது எனக்கோ மிகவும் ஆயாச மாகவிருக்கிறது. சற்று உறங்குகின்றேன். (படுத்துக்கொள்கிருள்)

[வேங்கைமரமான சுப்ரமண்யர் வளையல்
செட்டி வேடம் புனைந்து வருகிருர்]

செட்டி.—(ஓர்புறமாக)

(பெங்காயிலாலேஷாரீரா என்ற மெட்டு)

வாரும்வாரும்வளையல்—என் அம்மணி (வா)

வாரும் வாருமிதோ பாரும்பாரும்வெகு
வாஞ்சைதரும்வளையல் என் அம்மணி (வா)

நீலமணிவளையல் நிகரற்றபூவளையல்
கோலச்சம்பாவளையல் என் அம்மணி (வா)

பம்பாய்நகர்வளையல் பகட்டாம்பூனுவளையல்
அன்பாய்போடும்வளையல் என் அம்மணி (வா)

அழகுபெறும்வளையல் அதிவிலையாம்வளையல்
பழகிப்போடும்வளையல் என் அம்மணி (வா)

பச்சைநிறவளையல் பண்பாம்ஜப்பான்வளையல்
இச்சைதரும்வளையல் என் அம்மணி (வா)

அருமணமாம்வளையல் யார்க்கும்போடாவளையல்
முருகன்போடும்வளையல் என் அம்மணி (வா)

வேடுவ வேடங்கொண்டு சென்றதிற் பயனில்லாது போயிற்று. இவ்வேடங் கொண்டதால் இப்பெண்மணியின் கரந்தொட்டாவது மகிழ்வது நிச்சயமென இவ்வேடந் தாங்கினேன். சென்று பார்க்கின்றேன். (வள்ளியினருகிற் சென்று)

(பகிரங்கமாக) வளையல்போடுவார் ஒருவருமில்லையோ! வாருங்கள். நல்ல நல்ல வளையலெல்லாமிருக்கின்றது. விலையோ குறைவு, வளையோ அதிசயம். வளையோ வளை!

[வளையல்செட்டி குரல் கேட்டு வள்ளி வருகிருள்.]

(எங்கேபோனுலுமழந்தன்கூட என்ற மெட்டு)

வ.—வாரும்வளைவிற்கும் பெரியோரே இங்கு
வந்தவிபர மென்னநீரே (வா)

செ.-பாதைதப்பியிங்கு வந்தேன்மானே உன்னைப்
பார்த்துமனது மகிழ்ந்தேனே (பா)

வ.—வளையல்விலையென்ன சொல்வீரே சொன்னல்
வாங்கியணிவேனே கையிற்சீரே (வா)

செ.-விலைமதிக்காவளைய விதுதானே உன்முன்
விளம்பவியலாது விலைதானே (பா)

வ.—உள்ளவிலைசொன்ன லணிவேனே அதற்
குற்றபொருள்கையிற் றருவேனே (வா)

செ.-வேறென்றும்பெறுவ தில்லைதனமே நீ
விரைந்தீவையேமகிழ அனமே (பா)

வள்ளி.—செட்டியாரே! வளையின்விலைகூறினல் வாங்குவது நிச்சயம். ஒவ்வொன்றின் விலையும் சொல்லும்.

செட்டி-அம்மணி! மற்ற இடங்களில் இதற்கு விலையதிகம். தங்களிடம் பெறுவ ததிகமில்லை. எனக்கேற்ற தனமே தந்தால் போதும். மிகவும் மகிழ்வேன்.

வள்ளி.—ஈதென் பரிசாசம்!

செட்டி.—பரிகாசமல்ல. எனக்கேற்ற தனம் நீயே தெரிந்து தருவாய் யென்றே உரைத்தேனல்லாது கபடு ஒன்றுமில்லை.

(மார்கழிமாதம் என்றமெட்டு.)

வ.—சீர்பெறும்வளைவிற்கும் செட்டியாரேநீசுக ளிருப்பதுஎந்ததேசம்
சிறப்புடன்உமதுபே ருரைத்திடுவீருங்கள் சுற்றத்தார்க்கெங்கேவாசம்

செ.-வடக்கேவெகுதலை வாழ்வதுபழனியென் நாமமோமுருகன்செட்டி
மாமனேபெருமாள் செட்டியார்தந்தை வழுத்துஞ்சொக்கேசன்செட்டி

வ.—சாதித்தொழிலிது தானேஉமக்குச் சகோதரர்தானில்லையோ
தள்ளாடும்வயதிலித் தொழில்செய்குறீர் நீர் தக்கமைந்தருமில்லையோ

சே.-அண்ணனும்கணபதி செட்டிஎனக்கின்னம் அருமணமாகவில்லை
அன்னமேஉன்கரம் தொட்டுவளையிட ஆசுமேதயவில்லையே (அ)

வள்ளி:—ஏது! வர வர நெருங்குகிறீர். வார்த்தையும் ஒவ்வொன்றாக வளர்கின்றது. சரியல்ல. ஜாக்கிரதையாகப் பேசும்.

செட்டி:—அம்மணி! தங்கள் கையைத்தொட்டு வளையலிடும் முகூர்த்தத்தினால் எனக்கு விவாகமாகுமென்று சொன்னேனே தவிர வித்தியாசமாக ஒன்றும் சொல்லவில்லை.

(நாரதன் சொன்ன என்றமெட்டு.)

சே.—பாகுநேர்மொழி மோகனக்குறப் பாவையேவள்ளி மானே
சுவைபார்த்திடாதசெந் தேனே
என்மேல்பட்சமேனில்லை நானே—அந்த
பஞ்சபாணனு மிஞ்சியேவிடு வெஞ்சரஞ்சகியேனே (பா)

வ:—பிடித்தமாய்வளை தொடுத்துமேகாசை முடித்திடும்நல்ல செட்டி
யாரேசீங்களே கெட்டிக்
காரராகவே சொற்புகட்டி—இங்கு
பிதற்றுதீர்மனம் போனவாறென்னை பேதையென்றே பகட்டி ()

சே.-பேதையென்றெண்ணி னால்விரும்பியே யிங்குநான்வந்தி ரேனே
பெரிதாகவேயெண்ணி னேனே
இதில்பேதகமில்லை தானே—மையற்
பித்தினால்தலை சுத்துதேயணே மெத்தவேநலந் தானே (பா)

வ:—கொண்டவன்போலக் கண்டவாறு நீ கூறுதல்நீதி யல்ல
யெனக்காறுதல்சேதி சொல்ல
வந்தாய்தீரனேயிங்கு மெல்ல—வளை
தூக்கியேபதி நோக்குவாயினி வருவரே அண்ணர் கொல்ல (பி)

சே:-உந்தனுயிர் போகினுமெனக் குற்றிடும்புகட் பேரே
கடைக்கண்ணினாற் சற்றுப் பாரே
மனக்கவலையையிங்கு தீரே—உள்ள
தோதினேன்என்னை யாதரித்தருள் உன்னையன்றிவே றாரே (பா)

வ:—என்னநான்சொன்ன போதிலுமுனக் கின்னமும்புத்தி வல்லை
யிதுவென்னவோபெருந் தொல்லை
செயவேற்குமோதினைக்கொல்லை—தனைப்
பார்க்கவேயண்ண மார்வருஞ்சத்தம் காதிலேன்பட வில்லை (பி)

செட்டி:-எழில்மிகு ரதியே! நின்னின்பம் பெறாது செல்லக் காலெழவில்லையே! நானென்னசெய்வேன்? என்மேற் பிழையில்லை. அப்பாவி மதன் செய்யும் துன்பம் பொறுக்கமுடியவில்லை. இன்னும் நின்மன மிரங்காததென்ன கல்லோ? இரும்போ?

வள்ளி:—மரியாதையல்ல. அண்ணர்வரின் துயர்பெறுவாய் சென்றுவிடு. (பரணுக்குச் செல்கின்றாள்.)

[வளையல் செட்டி மறைகின்றார்.]

ஹா! கஷ்டம்! கஷ்டம்!

(முகாரி ரூபகம்)

உன்திருவுளமிதுவோ ஜெகதீசா உன்துணையன்றிஎதுவோ? (உ)

வன்னமயில்மீதேறும் பன்னிருகைவேலா
வந்துகாத்தருள்தாரா வஞ்சமென்னனுகூலா (உ)

வேடனொருவன்வந்து வீம்புமிகவேபேசி
மெல்லியென்னோடுவாது விளைத்தான்கைகளைவீசி
போடும்வளையல்தூக்கிப் புகுந்தானோர்பரதேசி
புத்திகெட்டுப் புலம்பிப் போனார்நெருங்கக்கூசி (உ)

ஏ முருகா! நின் திருவிளையாடலோ ஈதெல்லாம்! அல்லதுஞூதோ! ஒன்றுமறிகிலேனே! பலரால் துன்பமுறவேண்டியிருக்கின்றதே! எப்போது நின்னருள் கிட்டுமோ? வீணில் என்னைவருத்தாதே. விரைவில் காட்சி தந்து மகிழ்ச்சி தருவாய். முருகா! முருகா!

[வள்ளி அயர்கின்றாள். குறத்தி வருகிறாள்.]

குறத்தி.—(ஓர்புறமாக)

தெனதந்தின தெனதந்தின தெனதந்தின தெனன
தெனதந்தின தெனதந்தின தெனதந்தின தெனன

குவலயத்தி லுள்ளபெரி யோர்களேநீர் வாரும்
கூறுங்குறி தப்பாது கண்டுகளி கூறும்
பலவரசர் புகழ்ந்திடப்பெற் றோம்பரிசு மெடலே
பார்த்துமகிழ் வீரேஎங்கள் ஜோதிடத்தின் கடலே
குணமான பலமருந்து கொடுத்துபிணி தடுப்போம்
குதித்தாடும் பேய்களையும் கட்டியேவைத் தடிப்போம்
மணமாகாப் பெண்களுக்கு மாலைசூட்டி வைப்போம்
மாந்தருக்குத் தொல்லைசெய்து வரினுந்தீர்த்து வைப்போம்
குறச்சாதி எங்கள்குலம் குமரனெங்கள் சாமி
கொண்டாடி குறிபாடி வந்தோமிந்தப் பூமி
தேன்பொழியுஞ் சோலைநிறை சேர்கிரியில் வாசம்
செந்தமிழ்கோ பாலன்சொல்லில் வைப்போம்விசு வாசம் (தெ)

குறிபார்க்கலையோ குறி!

[குறத்தி வருதல்கண்ட வள்ளி எழுந்து வருகிறாள்.]

வள்ளி.—ஏ! குறிபார்க்கும் மாது! எனக்குக் குறி சொல்லுவாயா?

குறத்தி.—ஆகா! எப்போ எப்போ இன்னு காத்துக்கிட்டே இருக்சேன். மவராணியாட்டமா இருக்குறியே அம்மா! ஒனக்கு சொல்லாமே வேறே யாருக்கு சொல்லப்போறேன். சொல்றேன் கேக்குரியா? முருவா!

(நொண்டிச்சிந்து)

சொல்லுவேன்கேளும்அம்மணி-இங்கு
தோகைமயில்போலுலாவும் மாதரமணி (சொ)

சேர்கிரிச்சாரலிருப்பு-எமக்குத்
தினந்தினம்குறிசொல்லு வதேபிழைப்பு (சொ)

ஜாதிக்குறவர்கூட்டம்-எமக்குச்
சாதகமிகுந்தகந்த சாமியாட்டம் (ஜா)

மான்வயற்றினிற்பிறந்தாய்-வனத்திடை
வள்ளிக்கொடியருகிற் நீகிடந்தாய் (மா)

வேட்டையில்கண்டநம்பி-ராஜனும்
விரைவுடனெடுத்தன னுனைவிரும்பி (வே)

அண்ணமாரெழுவருண்டு-உனக்கு
ஆகுதுவயதிப்போது ஆறிரண்டு (அ)

தினைப்புனங்காக்கவந்தாய்-நல்ல
சேதிசொல்லவந்தமுனி மீதுநொந்தாய் (தி)

வேடனொருவன்வந்தான்-உன்பால்
விரகங்கொண்டேபின்பு மரமறைந்தான் (வே)

வளையல்கொண்டொருவன்பின்னே-உன்னை
மணந்துசுகிக்கவென உந்தன்முன்னே (வ)

சம்மதிக்காமல்நீயே-மனதிற்
சரவணபவனிரு தாளையெண்ணியே (ச)

பரணிருந்தாயலோட்டுறாய்-என்னைப்
பார்த்ததுமகிழ்ந்ததுபோல் முகங்கோட்டுறாய் (ப)

கந்தனேமாலேசூட்டுவான்-மனம்போல்
காரியமெலாம்நடக்கும் புகழ்கூட்டுவான் (க)

ஜெயம்ஜெயம்நாளுமினியே-வருகுது
செப்பினேன்தப்பாதெ னப்பனுணையே (ஜெ)

அம்மணி! நீ மனசுலே நெனேச்ச அந்த முருவனே ஒன்னெக் கலியாணம் பண்ணிக்குவான். இது சத்தியம். மனசுலே கவலே வேண்டாம்.

வள்ளி.—மிகவும் சந்தோஷம். இந்தா இந்த தினேக்கதிர்களே நீ எடுத்துச்செல்வாய்.

[குறத்தி செல்கிருள்.]

ஸீன் 7.

இடம்.—சாலேயோரம்.

சுப்ரமண்யர் கிழ சன்யாசி உருவத்துடன் வருகின்ருர்.

சுப்ரமண்யர்.—வேடனுகியும், செட்டி வேடந்தாங்கியும், காரியம் பலிதப்படாது போயிற்று. முனிவருக்குத் தந்த வரத்தை யெவ்வாறு நிறைவேற்றுவதோ? இந்தக் கிழ வேடத்தாலாவது பயன்படுமோ, அல்லது இதுவும் வீணுகுமோ? இம்முறை காரியம் கைக்கொள்வேன். யாவர் சத்தமோ கேட்கின்றது கவனிக்கின்றேன்.

[நம்பிராஜனின் குமாரர்கள் வருகின்ருர்கள்.]

மூத்தவன்.—

(கழத்தில் விழுந்தமாலே என்றமெட்டு.)

வாரும்விரைவில்எழில் மாதுவள்ளியைக்கண்டு
மனமிகக்குளிர்ந்திட விப்போதே
வனமதிற்றனிமையா யிருப்பதால்பார்த்திட
வாஞ்சையுண்டாகுதே நற்போதே (வா)

வரிபுலிகாடிகள் வாழுங்கானதில்வள்ளி
மதகரிவரில் பயப்படுவாளே
வாரும்வாரும்நீங்கள் மனமிகப்பதறுதே
மால்மருகா துணே நின்ருளே (வா)

தம்பிகாள்! நம் தங்கை யானேக்கு மிகவும் பயப்படுவாளே. இன்று என்னமோ என் மனம் ஒர்விதமாக இருக்கிறது. போய் பார்த்து வருவோம் வாருங்கள். வள்ளியை.

[கிழ சன்யாசி எதிரில் வருகின்ருர்.]

கிழவர்.—முருகா! வேலுமயிலும்! வேலுமயிலும்!

இளையவன்.—அண்ணா! பார்த்தீர்களா! பெரியார் ஒருவர் வருகின்றார்.

எல்லோரும்.—ஸ்வாமி! நமஸ்கரிக்கின்றோம்.

(ஏழு பிள்ளைக்காரி என்றமெட்டு.)

மூ.—எங்கிருந்துஎங்குபோறீர் இவ்வனத்தில்வந்ததென்ன
ஏழையெமக்கேயுரைப்பீர் பெரியோரே

கி:—தங்குபுகழ்காசிவாசம் வந்தோம்தீர்த்த யாத்ரைநேசம்
சந்தோஷங்கொண்டோமேகண்டு நீர்யாரே

மூ:—வேடர்குலத்துற்றோம்நாங்கள் மேவிடுஞ்சிற்றூரெங்களூர்
விரும்பிநீரிங்கேசின்னா ளிருந்தேகும்

கி:—என்தவத்திற்கேற்றஇடம் இங்கிருக்குதோநற்றடம்
இருப்பின்உரைப்பீர்திடம் இவண்மேவும்

மூ,—மதிவதனநல்மெல்லி மங்கைபணிக்கேற்றவள்ளி
வளர்புனம்ஏற்றதுவாம் மணமாரும்

கி:—வாரும்வாரும்செல்வோமங்கே மாபசிதணிக்கயிங்கே
வகையறியேனேசென்று மகிழ்வாக

மூத்தவன்—பெரியோரே! நமஸ்காரம். தாங்கள்யார்? இங்குவந்ததென்ன? இப்பெரும் வயதில் தாங்கள் தனியேவரலாமா?

கிழவர்:—மைந்தர்காள்! மங்களம் பெருகுக. எனக்கு ஊர் பல· ஏற்றதெல்லாம் இடம். தற்போது காசியிலிருக்கின்றோம். பாதைதெரியாது இந்த இடத்தில் பசிக்களைப்பினால் படுத்தோம். உங்களுடைய குரல் கேட்டு மனச்சந்தோஷப்பட்டோம். எனக்கு தக்கார் ஒருவருமில்லை. எல்லாம் நீங்களே. நான் குமரி தீர்த்தமாடச் செல்ல உத்தேசித்துப் புறப்பட்டேன். உங்களால்தான் என் எண்ணம் பூர்த்தியாகவேண்டும்.

மூத்தவன்:—தபோதனரே! இதோ பரண் அருகாமையிலிருக்கின்றது. அதனில் என் தங்கை வள்ளிநாயகி இருப்பதால் தங்களுக்குவேண்டிய சௌகரியம் பெறலாம். சிலநாளிருந்து, வந்தகளைப்பாற்றிப் பின்பு தீர்த்தமாடச்செல்லலாம். வாருங்கள் செல்வோம்.

கி:ழவர்—ஆ! வள்ளியா? தங்கள் தங்கையா? புத்திசாலி போலிருக்கின்றது. என்பாக்யமே பாக்யம். செல்வோம் வாருங்கள்.

ஸீன் 8.

இடம்:—தினைப்புனம்.

வள்ளி ஆயாலோட்டுகின்றாள். அவளண்ணன்மார் எழுவரும் கிழ சன்யாஸியை அழைத்துக்கொண்டு வருகிறார்கள்.

வள்ளி.—அண்ணா! வாருங்கள், வாருங்கள், இவர் யார் பெரியவர், மிகவும் பழுத்த கிழமாகவிருக்கின்றார்.

(மோகனம் நுபகம்)

மூத்தவன்—இவர்நல்லபெரியாரம்மா இங்கிவர்வர
ஏற்றநற்கால மென்னம்மா (இ)

தவமுனிவேடங்கொண்ட ஷண்முகனையொப்பியே
தள்ளாடித்தள்ளாடி வந்தார்துதிசெப்பியே (இ)

சொல்லும்சொல்தவறாதே தொண்டுசெய்யாதிராதே
அல்லும்பகலும்விட்டு அப்புறம்விலகாதே
பொல்லாதவளென்றேயெப் போதும்நீபேரெடாதே
புத்திசொல்லவந்தேனென் றென்மேற்கோபப்படாதே (இ)

கண்மணி! இம்மகான் இங்கு வந்ததே நற்காலமாகும். நம்குல தெய்வமென்றே சொல்லவேண்டும். இவர் சின்னாளிங்கிருந்து பின்னர் குமரிதீர்த்தமாடச் செல்லுவார். இவருக்கு யாதுங் குறைவில்லாமல் அவர் சொற்படியே தொண்டுசெய்து வருவாய். நற்பேறுபெறுவாய். நாங்கள் சென்றுவருகின்றோம்.

வள்ளி—அங்கனமே புரிகின்றேன் தாங்கள் சென்றுவாருங்கள்.

மூத்தவன்—பெரியோரே! நாங்கள் சென்றுவருகின்றோம்

கிழவர்—ஜெயமுண்டாகுக. சென்றுவாருங்கள். விரைவில் முருகனருள் மிகப்பெறுவீர்கள். முருகா! முருகா!

[எல்லோரும் செல்கின்றனர்.]

(பவளக்கோடிமீதிலாசை என்ற மெட்டு.)

வ.—பணிந்தேனய்யாவுனது பாதாரவிந்தம்
பாதாரவிந்தம் தாதா அனந்தம் (ப)

தொகையறா.

நீதா விநோதா வதீதா-நிகரற்ற சற்குண போதா
வேதாகமங்களுணர்நாதா-விரும்பியிவண்வந்ததேநற்போதாம்(ப)

கி.—ஜெயமோங்கிடும்புகழே சேரும்விவாகம்
சேரும்விவாகம் கூறும் அநேகம்

தோகையற.

செம்பொற்பதுமைநிகர்மின்னே—தேடக்கிடையாவரும்பொன்னே
திகழுமிப்பரணிலென்முன்னே--சீர்பெறவுலாவுமுயர்கண்ணே (ஜெ)

வள்ளி.—நமஸ்கரிக்கின்றேன் தாத்தா.

கிழவர்:—விரைவில் மணம்பெறுவாய்.

வள்ளி.—அதிருக்கட்டும். தங்களுக்கிவள் செய்யவேண்டிய தொண் டென்னவென்று சொல்லுங்கள்.

கிழவர்:—வள்ளி! மணம்பெறுவாய் விரைவில் என்று கூற, அதிருக் கட்டுமென்று சொன்னதென்ன? மணம்பெற உனக்குச் சம் மதமில்லையோ? இருந்தால் அவ்விதம் கூறியிராய்.

வள்ளி:—பெரியோரே! ஏன் அதைப்பற்றி வற்புறுத்துகிறீர்? தங்களு க்கு வேண்டியதைச் சொல்லுங்கள்.

கிழவர்:—நான்வேண்டியது கேட்பின் நீ தருகுவையோ? வீணில் ஏன் பெருமை பேசுகிறாய்.

வள்ளி:—ஐயா! என் அண்ணன்மார்முன் சொன்னவண்ணமே நடப் பேன். அதில் ஒன்றும் பேதகமில்லை. தங்களுக்கு வேண்டிய தென்ன?

கிழவர்:—வள்ளி! நின்மணமே நான் வேண்டியது.

வள்ளி:—போதும் கிழவரே அப்பேச்சை நிறுத்தும். பரிகாசமும் இன்னும்வேண்டியிருக்கிறதோ தங்களுக்கு?

கிழவர்:—வள்ளி! நீ மணம்பெறவேண்டுமென்று சொன்னேனே யொழிய பரிகாசமான வார்த்தையொன்றும் நான் சொல்லவில் லையே. இதற்குத்தானோ கோபம் வந்துவிட்டது உனக்கு? மிகு ந்த புத்திசாலி யென்றல்லவோ நினைத்தேன், சரி சரி.

(நடந்ததென்னசொல்லம்மா என்ற மெட்டு)

கி:—நானென்னசெய்குவேனே நம்பி
ராஜன்பெற்றவள்ளி யேமடமானே (நா)

வானோர்புகழ்ரதியே நறுந்தேனே
மாபசிக்கொடுமையை யென்சொல்லுவேனே
ஏனோஇவன்வந்தா னென்றுநீதானே
ஏறிட்டுப்பாராம லிருக்கிறாய்வீணே (நா)

வ:—வேண்டுவதென்னசொல்லும் துதி
வேதியரேசொன்ன வார்த்தையில்நில்லும் (வே)

மெல்லிநானிதுவரை செய்பிழையென்ன
விளம்புவீர்ஞாய மில்லாமல்நீர்சொன்ன
சொல்லுளந்துளைக்குதே சோதிப்பதென்ன
தோகைநான்தருகுவேன் தினைமாவுந்தின்ன (வே)

கி.--சீக்கிரமாய்தருவாய் தந்தால்
தேன்மொழியேமணம் சீருடன்பெறுவாய் (சீ)

பாக்கியமென்ன செய்தேனிங்குவரவே
பசிதனக்கேற்றநல் லுணவினைப்பெறவே
யார்க்குங்கிடைக்காத அருந்தவத்திருவே
அகமதுகுளிர்ந்துநான் மிகமகிழுறவே (சீ)

வ.—நானிலம்புகழ்பெரியோய் போற்றும்
ஞானபண்டிதன்துதி நலமதற்குரியோய் (நா)

தேனுடன்கலந்தநல் மாவிதுபாரும்
சிந்தைமகிழ்ந்துட னேபசியாரும்
கானகந்தனிலென்ன கிடைக்குமோவேறும்
கர்த்தனேகிடைத்ததி னுற்களிகூறும் (நா)

கிழவர்.—வள்ளி! மிகுந்த பசியாகின்றது. விரைவில்பசியாற்றுவாய்.

வள்ளி.—அய்யா! இங்குதினையைத்தவிர வேறுதானியம்கிடையாது தினையிடித்து மாவாக்கித் தேனுடன் கலந்துதருகிறேன் உண்டு பசியாறுங்கள்,

கிழவர்.—சீக்கிரம் ஏதாகிலும்கொடு. பசி அதிகரிக்கின்றது வள்ளி!

[வள்ளி தினைக்கதிர்கொய்து இடித்து மாவாக்கித் தேன்கலந்து கிழவருக்குக் கொடுக்கிறுள். கிழவர் சாப்பிட்டவுடன் நெஞ்சடைத்துக்கொண்டதுபோல் பாசாங்கு செய்கிறுர்.]

(ஆண்பிள்ளையை நம்பலாமா என்ற மெட்டு.)

கி.—பாதகியேகுறவள்ளி-உன்போல்
பார்த்ததில்லையடி வஞ்சகக்கள்ளி (பா)

பசியெனத்தினையதை யிடித்ததைத்தெள்ளி
பாங்குடன்தேன்கலந் தேயதையள்ளி
புசியெனயீந்தனைப் பலஇதம்சொல்லிப்
போகுதேவுயிரிப்போ என்செய்வேன்துள்ளி. (பா)

வ.—ஆயிதென்ன அனியாயம்-ஐயோ
யானென் றுமறியேனே யிவர்செய்யுமாயம் (ஆ)

அரும்பசியென் றிந்தக் கிழவனுந்துடிக்க
அன்புடன்மாவைத் தெள்ளிநான்கொடுக்க
பெரும்பிரட்டாகவே யிங்கிவர்நடிக்கப்
பேதகஞ்செய்தறி யேனேசொல்தடிக்க (ஆ)

கி.—நஞ்சதையேகலந்தாயோ எந்தன்
நாவறளுதேகொல்ல வேநினைந்தாயோ (ந)

வஞ்சியுன்னண்ணன்மார் வனத்தெதிராக
வந்துனைப்புகழ்ந்தனர் மகிழ்ச்சியுண்டாக
வஞ்சனை தெரியாமல் மிகமிகவேக
மாகவேவடந்துவந் தேனிங்குநோக (ந)

வ.—வீண்பழிஎன்மேற்சுமத்தி நீர்
வேஷங்கள்போடுறீர் விதவிதமாத்தி (வீ)

வித்தாரஞ்செய்திடுங் கள்ளிநானல்ல
வேதியராமுமை மெல்லிநான்கொல்ல
விளைந்ததென்காரணம் ஈதெல்லாம்நல்ல
வேடிக்கையாகவே யிருக்குதேசொல்ல (வீ)

கிழவர்.—ஆ, பாதகி! என்னகாரியஞ் செய்தனை? என்னைக் கொல்லவா நினைத்தாய்? இதற்குத்தானே வெகுதுலையிலிருந்து இங்கு வந்தேன்? நீயே மிக நல்லவள், வள்ளி!

வள்ளி.—ஐயோ ! யானென்னசெய்வேன் ? யானென் றுமறியேனே? நல்ல மாவுடன் தேன் கலந்து தானே கொடுத்தேன்? வேறு வஞ்சகமில்லையே! இதுவும் என்காலமா?

கிழவர்.—

(சீரார் சபையில் வாழும் என்ற மெட்டு)

சண்டாளிகுறவள்ளி சதிகாரிநீயேகள்ளி
கொண்டாட்டமாய்நீதெள்ளிக் கொடுத்தாயேமாவையள்ளி (ச)

நாவதுவறளுதே நல்லெண்ணமாறுதே
தாகமிகவாகுதே தலைசுத்தியேயாடுதே (ச)

தண்ணீராவதுதாடி சாற்றுமென்களைநாடி
புண்ணியயல்லவோடி போகுமென் ஆவியோடி (ச)

பாதகி! என் நாவையுள்ளே இழுக்கிறது. சற்றும் தாமதிக்காமல் ஜலம் தருவாய். இல்லாவிடில் உயிர் போம் போல் இருக்கிறது. வீண்பழியை ஏற்றுக்கொள்ளாதே.

வள்ளி.—ஜெகதீசா! நின் சோதனையா யிதுவும்? ஐயோ! இங்கு ஜலமில்லையே. அந்தச் சுனைக்கல்லவோ போகவேண்டும். வாருங்கள் சென்று ஜலமருந்தி வரலாம்.

கிழவர்.—சுனைக்கா போகவேண்டும்? அது எங்கே இருக்கிறது? என்னால் நடக்க்முடியவில்லையே. முருகா! என்னசெய்வது? வேறு விதியில்லை. சரி என் கையை பிடித்துக் கூட்டிக்கொண்டுபோ. என்நாவல்லவோ இழுக்கின்றது.

வள்ளி.—இந்தக் கோலின் ஓர்முனையைப் பிடித்துக்கொண்டு என் பின்னே சற்று தூரத்தில் வந்தால்கூட்டிச் செல்கின்றேன்.

ஸீன் 9.

இடம்—மலையருகிலுள்ள சுனை.

வள்ளி ஓர் புறமும் கிழவர் ஓர்புறமுமாக கோலைப்பிடித்துக் கொண்டு வள்ளி முன்னும் கிழவர் பின்னு மாக வருகின்றனர்.

வள்ளி.—பெரியோரே! நான் எவ்வளவோ வாஞ்சையுடன் தங்களுக்குப் பணிவிடைசெய்து சந்தோஷமாய்க் காலம் கழிக்கலாமென்று நினைத்தேன். நானொன்று நினைக்கத் தெய்வம் தானொன்று நினைந்தது. போதும் போதும் நான் தங்களிடம் படும் கஷ்டம். (சுனையருகிற்சென்று) இதுதான் சுனை. மெள்ள மெள்ள இறங்கித் தாகந் தணியும்.

கிழவர்.—ஐயோ வள்ளி! இறங்கும் வழி தெரியவில்லையே.

வள்ளி.—வழி இதோ இருக்கிறது. மெள்ள மெள்ள இறங்குங்கள்.

கிழவர்.—வள்ளி! மிகவும் பாசியாக விருக்கின்றதே. இந்தச் சுனையிலா நானிறங்குவது? இதுவா என் தாகம் தணிக்கும்?

வள்ளி.—தாத்தா! பேஷ்! மிகவும் நன்றாய் இருக்கின்றது. உமது கண், வேண்டிய இடத்தில் தெரியும்போலிருக்கிறது. மகா வித்தைக்காரர் நீவிர்.

[கிழவர் தவறியது போல் சுனையில் விழுகிறார்]

கிழவர்— (நடக்க நடக்க என்ற மெட்டு)

ஐயோசுனையிலென்னை அநியாயமாகத்தள்ளி
யாதுமறியாதுபோல் அங்கேன்பார்க்குறாய்வள்ளி (ஐ)

எந்தவிதமாகிலும் என்னைக்கரையேற்றுவாய்
சிந்தைபதறுதிப்போ தேனேநீகாப்பாற்றுவாய் (ஐ)

ஹே சண்டாளி! என்னைச் சுனையில் தள்ளிவிடவா கூட்டி வந்தாய்? இது தெரிந்தால் வந்திரேனே. அடி பாதகி! விரைவில் கைகொடுத்து என்னைக் கரையேற்றடி.

வள்ளி.— (விருத்தம்)

இக்கிழந்தனக்குவேண்டும் ஏவல்நீபுரிவையென்று
சிக்கினையறியாவண்ணர் செப்பியவார்த்தையாலே
மிக்கவேதுயருழன்றேன் மேலுமென்கரந்தந்தேற்ற
மைக்குழலுமையாள்மைந்தா வைத்தனையென்செய்வேனே.

ஷண்முகா! நின்னையன்றி, மற்றெவரையும், என் அங்கம் ஸ்பரிசியாவென எண்ணினேனே! அதற்கு மாறாக, இக்கிழத்தின் கரம்பற்றவா வைத்தாய்? கோல்கொண்டு கரையேற்றவும் முடியாதாயிற்று. முருகா! உன் சம்மதமோயிது? ஆபத்து காலத்திற்கென் செய்வது! (கரங்கொடுத்துக் கரையேற்றுகிறாள்.)

(பூமி மெச்சிடு என்ற மெட்டு)

கி.—தாகந்தணிந்திட வேசுனைகாட்டிய தையலே குறத் தையலே
தர்மமாகுமடி தாகந்தீர்த்ததுபோல் மையலே தீர்த்தால் மையலே

வ.—ஏதுகிழவாநீ மெள்ளமெள்ளவந்தே யெத்துறாய் வீணில்கத்துறாய்
இன்னுமுனக்குப்ப யித்தியமேனதை நத்துறாய் இங்கே சுத்துறாய்

கி.-தாடிநரைத்த கிழவனென்றென்னையே யெண்ணாதே வாதுபண்ணாதே
தள்ளாடினாலுமிணைமாரனைச்சொல்ல வொண்ணாதே பேதம் எண்ணாதே

வ.—பல்லும்விழுந்திரு கண்ணொளியுமங்கிப் போச்சுதே கேலி யாச்சுதே
பக்கத்திலேவந்து நிற்குறீரேவெட்கம் போச்சுதே வெறும்பேச்சிதே

கி.—கானக்குறத்திநீ மானைவிரட்டும்வா றெண்ணினாய் கேலிபண்ணினாய்
காட்டுவேன்என்திறம் கண்டால்தெரியும்வேற் கண்ணினாய் புகழ் [பெண்ணினாய்

வ.-கள்ளவேஷப்பரதேசிஎன்றெண்ணாமல்அண்ணமார்நல்லஎண்ணமாய்க்
கைலாகுதந்தழைத் தேவாந்தாரென்முனம் வண்ணமாய் பேசத் [திண்ணமாய்

கிழவர்.—அன்புமிக்க அருமின்னே! நீயே என்னுயிர் தந்தாய். கைம்மாறு என் செய்குவேன்? ஆயினும் அது ஒன்றுதான் நின்பாற் குறை. அதையும் களிபெறச் செய்குவை. மாரன் பகழி, கணக்கில்லாமல் எய்குறான். அய்யோ சற்று தயவு செய். ஆத்ம ரக்ஷகியே! நானினி சகியேன்.

வள்ளி.— (எங்கே போனாலு மூன்கூட என்ற மெட்டு)

பார்க்கஇவர்வேஷம் நல்லபரதேசி—யிவர்
பக்காஆஸாமி பெண்கள்விஸ்வாசி (பா)

பக்திக்கதைபுகட்டி பாவையெனைமிரட்டிச்
சித்தங்களிக்கவோட்டித் திரிகுரூரேவிரட்டி

போட்டார்ருத்ராக்ஷமாலை புலம்புறார்போகநூலை
காட்டிலிவர்க்கென்வேலை கண்டேனிவர்செய்லீலை (பா)

செய்கையெலாம்பிரட்டு செப்புவதோ உருட்டு
கையில்தடிபகட்டு காஷாயமோதிருட்டு (பா)

பலே பேஷ் ஐயா! உம் யோக்யதையெல்லாம் நன்கு விளங்கி விட்டது. உமக்கேன் இச்சந்யாசம்? வீணில் தத்தளிக்கின்றீர். நீர் செய்வதெலம் மோசம். ருத்ராக்ஷம், காஷாயம், இவையும் வேண்டுமோ உம் ஜென்மத்திற்கு? மரியாதையல்ல. மானங் கெட்டுப்போகவா வந்தீர்? போதும் போதும் உம்முறவு. நடந்துவிடும்.

கிழவர்.—வள்ளி! வேடிக்கையாக உன் மனதைச் சோதித்தால் அதற்குள் என்னென்னவோ மிதமிஞ்சிய வார்த்தைகள் கூறி விட்டாயே. இதற்குத்தானா நின் அண்ணன்மார் என்னை இங்கு அழைத்து வந்தார். போதும் போதும் நின்பால் நான் பெற்ற சுகம். என்மேற்பிழையிருக்க வேறு யாரை நோவது?

வள்ளி.—சரி சரி வாரும் செல்லலாம்.

கிழவர்.—வள்ளி! மனதில் ஒன்றும் நினைக்காதே. உண்மையாக உன்னைச் சோதித்தேனே யொழிய மாறுபாடு ஒன்றுமில்லை. இன்றைப்பொழுதோ நாளையோ என்றிருக்கு•மெனக்குமா அது? சிறுபிள்ளையென்று பரிகசித்தேன். என்மேற் குற்ற மாய் நினைத்தாலும், மன்னித்துவிடு. சம்மதம். ஆ-மா-ம் வ-ள்-ளி! இவ்வனத்தில் துஷ்டமிருகங்கள் வசிக்குமே. அதனிடை உனக்கு ஒன்றும் பயமில்லையோ?

வள்ளி.—எனக்கொன்றும் பயமில்லை தாத்தா. தாத்தா! நான் என் னவோ சொன்னேனென்று என்மேல் கோபித்துக்கொள்ளா தீர்கள். நான் அறியாதவள் தானே.

கிழவர்—அது கிடக்கட்டும். நீ உலகமே யறியாதவள் பாபம். நீ ஒன்றுக்கும் பயப்படமாட்டாயா? பு-லி, க-ர-டி, சிங்கத்திற்கு!

வள்ளி.—இல்லை தாத்தா.

கிழவர்:— இந்தக் காட்டிலிருக்கும் பெரிய யா......

வள்ளி.—தாத்தா! சொல்லாதீர்கள். வேண்டாம். வேண்டாம்.

கிழவர்—யானைக்கு ?

வள்ளி.—ஐயோ! மற்றோர் முறை சொல்லாதீர்கள். மிகவும் வேண்டுகின்றேன். அதன் பெயர் கேட்டாலே என்னுளம் நடுங்குகின்றது.

கிழவர்—அப்படியானால் நான் இனிச்சொல்லவில்லை. (ஓர் புறமாக) இனி அண்ணா வரவேண்டியதுதான். அவரைத் துதிக்கின்றேன்.

(நோட்.)

வந்துகார்வந்துகார் வல்லபைமோகனா
வள்ளிமுன்யானையாய் வாஆகுவாகனா (வ)

மெத்தவென்னைவாட்டினாள் விரகத்தீயைமூட்டினாள்
சித்தங்களிகூட்டினால் செப்பும்புகழ்பாட்டினால் (வ)

பேரொலியொலிக்கவே பெண்ணிவள்பிரமிக்கவே
சீருடன்ரமிக்கவே செய்மணஞ்சிறக்கவே (வ)

[விநாயகர் யானைரூபமாய் வருகின்றார். கிழவர் ஓர் புறத்தில் நின்றுகொண்டிருக்கிறார். வள்ளி யானை வந்திருப்பதை யறியாமல், அவ்விடத்திற்குச் சென்று, பயப்பட்டு, கிழவரிடத்தில் ஓடிவருகிறாள்.]

வள்ளி.—தாத்தா! தாத்தா! காப்பாற்றவேண்டும்.

(பஞ்சமாபாதகம் படறதோ என்ற மெட்டு.)

நாதாநீயேதுணை வந்துகாரும்
நம்பினேன்எந்தனைச் சற்றுப்பாரும் (நா)

அந்தோவருகுதையோ யானையே
ஆதரித்தாளும் கோபம்வனையே (நா)

என்னசொன்னாலும்சரி இணங்குவேன்
எப்போதுமறவாமல் வணங்குவேன் (நா)

வழுத்துவீர்மறைவுற யானையே
மாதவன்கந்தன்மேலாணையே (நா)

[வள்ளி பயத்தால் கிழவரை கட்டிக் கொள்ளுகிறாள்.]

கிழவர்.—மணப்பதாக உறுதி சொன்னலொழிய யானைமறைவு றது.

வள்ளி.—ஸத்யமாக தங்களையே மணப்பேன்.

[யானை ஜாடைகண்டு மறைகின்றது.]

வள்ளி.—(முழந்தாளிட்டு) ஹே முருகா! அபலையாகிய எனக்குக் கனவில் காக்ஷி கொடுத்தாய், அந்நேரமுதற்கொண்டு இந்நேர பரியந்தம் நான் உன்னையே மணப்பதன்றி வேறு எவரையும் மணப்பதில்லையென்று உறுதிகொண்டிருந்தேனே. கடைசியாக, கோர யானைவர, என் உறுதி சிதற, தாடிநரைத்த கிழவரை மணஞ்செய்துகொள்ள ஒப்பநேர்ந்ததே! நின்னை அண்டினேர்க் கருள்புரிவாயென்று பெரியோர்கள் கூறுகின்றனரே! என் விஷயத்தில்மட்டுமா அவ்வாக்கியம் பொய்க்கவேண்டும்! உன்னையே அல்லும்பகலும் துதிசெய்துவந்த அபலையாகிய என் மீதுமட்டும் உன் மனமிரங்காததென்ன காரணமோ! முருகா! முருகா! (சோர்ந்து கீழேசாய்கின்ருள்.)

[கிழவராயிருந்த சுப்ரமண்யர் உடனே ஆறுமுகக்காட்சி தருகின்ருர்.]

ஆறுமுகம்.—வள்ளி! என்னரும் வள்ளி! உன் மனோரதத்தை நிறைவேற்றி, உன்னை ஆட்கொள்ள வந்துள்ளேன் ஆறுமுகம். எழுந்துபார்.

[வள்ளி திடீரெனவிழித்து ஆறுமுகத்தைப் பார்த்து பிரார்த்திக்கிருள்.]

வள்ளி.— விருத்தம்.

அரும்பொன்னேமணியேயெந்தன் ஆருயிர்நிலையேஉந்தன்
பெரும்புகழ்லீலைதன்னைப் பேதைநானறியாதென்னு
வரும்பலவார்த்தையெல்லாம் வழுத்தினேன் பொறுத்தல்வேண்டும்
சுரும்பினமதுவுண்டார்க்கும் சோதிசேர்கிரியுளானே.

நாதா! தங்களுடைய லீலாவினோதங்களை யறியாது, பலவாறு வார்த்தைசெப்பிய என் பிழையைப் பொறுத்து என்னை காத்தருளல் வேண்டும்.

ஆறுமுகம்.—கண்மணி! ஒன்றும் பிழையில்லை. நீ செப்பியதெல்லாமெனக்கு மிகவும் இனிதே. நீ இனியுன் மனைக்குச் செல்லுவாய். அங்குவந்தழைத்துச் செல்கின்றேன்.

வள்ளி.—நாதா! ஈதென்னவார்த்தை? இனி அரைக்கணமும் தங்களை விட்டுப் பிரிந்திருப்பேனே? இப்பொழுதே தங்களுடன் வருவேன்.

ஆறுமுகம்.—வள்ளி! ஆத்திரப்படேல்.

(அடுக்குமல்லிகை என்ற மெட்டு.)

மணக்கும்பூங்குழல் முடிக்குஞ்சுந்தரியே—இம்மாநிலம்புகழ்
வணக்குறவருக்கினியகண்மணியே—எழில்
மானேஇன்சுவைத் தேனேவந்துனை நானேயழைத்துப் போவேன்வருத்தம்
மனதிற்கொஞ்சமேனும்வையாதே—இதோநொடியில்
வருவேன் செப்பிய வார்த்தைபொய்யாதே—சுக
மாகவுன்பதி ஏகியங்கிரு வாகுடனதி வேகமாகவே
வருவேனிச்சயம் மாதேவள்ளியே—உந்தனண்ண
மார்களுக்கிளையேனேமெல்லியே—இனி
வாதுசெய்வது ஏதுசொல்வது சூதெனமதி யாதேஸத்தியம் ()

ஆறுமுகம்.—வள்ளிநாயகி! முக்காலும் உண்மையாகச் சொல்லுகிறேன். இன்றிரவு பதினைந்து நாழிகைக்கு வந்துனை யழைத்துச் செல்லுகிறேன். கவலை கொள்ளாதே.

வள்ளி.—நாதா! நிச்சயமா?

ஆறுமுகம்.—உண்மை.

வள்ளி.—கூறியவாறு வராவிடில் என் ஆவிதரியேன். இதுஸத்யம்.

(ஆத்துப்பாலம்தாண்டி என்ற மெட்டு.)

சிங்கார கெம்பீர ஸங்கீத விஸ்தாரா இங்கே தனியென்னையே
வைத்துநீர்—எங்கேபோறீர்முன்னையே,

ஆ.—சல்லாப ரஞ்சித உல்லாச வஞ்சிநான் சொல்லு வதைக்கேளடி
வாதேனடி—சொல்லுவதைக்கேளடி.

வ.—இச்சேதி நானறி யேனேவுன் ஞாயமதாகுமோஓர்நிச்சயம்
எந்தன்முன்—இயம்புவ தேசம்சயம்.

ஆ.—நானு மென்னை நம்பி யேனின்ற மாதென்று நானுன்னையேயறிவேனே
வருவேனே—நானுன்னையேயறிவேனே.

வ.—போதும் செய்யும்பரி காசமென்னைப் போதேயழைத்தேகுவீர்
நாதனே—போற்றும்புகழாகுவீர்.

சொன்னது தவறாமல் வரவேண்டும் நாதா.

ஆறுமுகம்.—அவசியம் வந்தழைத்துச் செல்வேன்.

[ஆறுமுகம் மறைகின்றார். வள்ளி கிலேசத்துடன் பரணுக்குப் போகிறாள். நம்பிராஜன் குமாரர்கள் வருகிறார்கள்.]

மூத்தவன்.—(ஓர் புறமாக)

(மலடிவயிற்று மகன்போலே என்ற மெட்டு.)

வருவீர்களேபுயவலியோரே நாம்
மகிழ்வுடன்விதைதினை வளம்நேரே கண்டு
மனமிகவுவந்துவள்ளியைச்சீரே யிங்கழைத்தேக.

தம்பிகாள்! தினை முற்றியிருக்கலாம் வாருங்கள். போய்பார்த்து வருவோம்.

இளையவன்.—(தினைக்கதிர் ஒன்றைக் கொய்துவந்து) ஆம் அண்ணு! கதிர்களெல்லாம் முற்றிவிட்டன. இனி காவல் வேண்டுவதில்லை. கதிரை யறுக்கச்சொல்லிவிட்டு நாம் நம் தங்கை வள்ளியை மாளிகைக்கழைத்தேகுவோம்.

மூத்தவன்.—ஆம் அதுவே சரி.

(சந்தனமிகுந்திலங்கும் என்ற மெட்டு.)

சுந்தரம் நிறைந்திலங்கும் சந்தத மிகவிளங்கும்
செந்திரு வனத்துலங்கும்-செல்விமானே
சிந்தையே மகிழ்ந்திடத் தினைவிளைந்த தேவளர்ந்து
செல்லுவோம் பதியுகந்து-வாதேனே (சு)

வ.—சீருலாவு மிப்புனத்தி லேயிருப்ப தேமிகுந்த
சிலாக்கியமென வேனினைத்தேன்-அண்ணமாரே
செப்பும் வார்த்தை தப்பிடேன்தம்
சித்தம்லப்ப வேநடப்பேன்—வருவீரே (சீரு)

மூத்தவன்.—சரி தங்கையே! இனி நம் மாளிகை செல்லலாம்.

வள்ளி—இப்புனத்திலிருப்பதே நலமென நினைத்தேன். ஆயினும், தங்கள் சொற்படியே வருகின்றேன்.

[எல்லோரும் மனைக்குச் செல்லுகின்றனர்.]

ஸீன் 10.

இடம்.—நம்பிராஜன் மாளிகையில் அந்தப்புரம்.

நம்பிராஜன் மைந்தர்கள் யாவரும் ஓர் புறம் படுத்துறங்குகின்றனர்.
தோழி மற்றொருபுறம் சயனித்துக்கொண்டிருக்கிருள்.
வள்ளி தனியாக வீற்றிருக்கிருள்.

வள்ளி.— (பியாக் ரூபகம்.)

எப்போவருவாரோ என்னுதன்
ஏங்குதேமனது பாங்குடனேயிங்கு (எ)

செப்பியநோ மாச்சுதேசொன்ன
சேதிபொய்யாச்சு தேகாரணமென்ன
தப்பாரொருக்கானு மீதெல்லாமென்ன
சந்தேகங்கொண்டோம் மனதிலேதுன்ன (எ)

ஒப்பாருமில்லாத உத்தமவீரன்
ஓகைதருமெழில் வாகானமாரன்
மெய்ப்போகமீந்தருள் மேலானதீரன்
வேண்டும்கோபாலன் தமிழ்க்குபகாரன் (எ)

என் நாதன் இதுகாறும் வரவில்லை செப்பியசொல் தவறு ரென்றல்லவோ நம்பி மோசம் போனேன். இல்லாவிடில் அவரைவிட்டிரேனே. ஏ மன்மதா! உன் கைத்திறமெல்லாம் விரைவில் காட்டிவிடு. சிலநிமிஷஞ்சென்றால் உன்கை பலிக்காது. என் நாதன் வந்துவிடுவார். தோழிகளும் உறங்குகிறார். இப் பெருங் காவலைக் கடந்து எவ்வாறு என்னை யழைத்துப்போ வாரோ என் நாதன்? ஏதேது நான் உயிர் துறப்பதே தகுதி. இல்லை இல்லை. பலவேடங்கொண்டு என்னைக் கைவசப்படுத்திய அத்தீரனுக்கு ஈதோர் பெரிதோ? மனமே துயருறாதே (படுத்துக் கொள்ளுகிறாள்.)

(படுத்தவாறே) இதோ வந்துவிட்டார் என்நாதன். நாதா! (எழுந்துட்கார்ந்து) இதென்ன கனவா காண்கின்றேன்? நாதனை காண்கிலேன். இன்னும் ஒரு கடிகைப்பொழுதில் அவர் வராதிருக்கின் உயிர் துறப்பேன், இது ஸத்யம்.

(படுத்துக்கொள்ளுகிறாள்.)

[ஷண்முகன் ஜோதிஸ்வரூபமாய் பிரவேசிக் கின்றார். காவலரனைவரும் மாயையால் உறங்குகின்றனர்.]

ஷண்முகன்.—என் அரும் வள்ளியெனும் மெல்லி! இதோ வந்து விட்டேன் எழுந்துவா.

வள்ளி.—(கண்விழித்து எழுந்து அவர் பாதத்தில் பணிந்து) நாதா! நமஸ்கரிக்கின்றேன். இவர்கள் விழித்துக்கொண்டால்?

ஷண்முகன்.—கண்மணி! கலங்காதே என் மந்திரசக்தியால் அவர் கள் இப்போதெழார். என் பின் வருவாய்.

[குகன் வள்ளியை அழைத்துக்கொண்டு கழுகாசலம் நோக்கிச் செல்கின்றார். நம்பிமைந்தரனைவரும் எழுந்திருக் கின்றனர்.]

நம்பிராஜன்.—என்ன! நம்மையறியாமலே நாம் இன்று உறங்கிவிட் டோம். வள்ளி! வள்ளி! வள்ளியைக் காணோமே? மைந்தர்காள்! சகி! வள்ளியெங்குசென்றாள்?

(தோடி-ரூபகம்:)

இங்கிருந்தவள்ளியைக்காணோம்—ஆ
இதுவிபரீதமதாகவே—யிருக்குதே—பேதகமாகவே (இ)

பங்கமிலாக்குலந்த னுக்கிதுபங்கமே
பார்த்ததில்லையிது யாவர்செய்பங்கமே
பொங்குதேசினமிகப் பதறுதேயங்கமே
பூவையைநாடியே தேடுவீர்விரைவாகவே யெங்குமே ()

இது ஒருபெரும் சூதாகவே தோன்றுகின்றது. எல்லோரும் வாருங்கள் வள்ளியைத் தேடுவோம்.

ஸீன் 11.

இடம்.-கழுகுமலை

வள்ளியும் ஷண்முகனும் வருகின்றார்கள்.

ஷண்முகன்.—கண்மணி! அதோ பார்த்தாயா நான் வாசஞ்செய்யும் கழுகுமலை.

வள்ளி.—பிராணபதி! நான் கானகத்தில் பல மலைகளையும் இடங்களையும் பார்த்திருக்கின்றேன். ஆனால், நாதா! இதைப்போலொத்த ரமணீயமான மலையையும் இடத்தையும் நான் கண்ணால் பார்த்ததுமில்லை, காதால் கேள்விப்பட்டதுமில்லை.

[நம்பிராஜன் குமாரர்கள் வருகின்றார்கள்.]

இளையவன்.—அண்ணா! அதோபாருங்கள் கள்வன் ஒருவன் நம் தங்கையை அழைத்துச் செல்கின்றான்.

மூத்தவன்.— (காம்போதி ஆதி.)

யாரடாநீ நில்லடாதிருடா எந்தன்
அருமைவள்ளியைத் தெரியாமலழைத்துப்போவ (யா)

அநு பல்லவி.

பாரடாஎனைத்திரும்பிக் கூறடா பதிலுத்தரம்
தேரடாவுனதுதிறம் பேரடாபதிதிரும்பி (யா)

சரணம்.

ஆறுமுகவனன்றி யாரெதிர்த்தபோதும்சற்றும்
அஞ்சிடாதசிங்கமென நீயறியாயோ
மாறுபட்டசெய்கையிது வீரனுக்குரியதாமோ
தாறுமாறாகவேபதில் சாற்றுவதால்புகழாமோ (யா)

பல்லைபல்லைக்காட்டுகிறாய் மெல்லவேமிரட்டுகிறாய்
பாதிராத்திரிவேளையிலுன் வல்லவத்தைநீட்டுகிறாய்
நல்லநல்லவீணிலெந்தன் கத்திக்கிரையாகாதே
நம்பியிவன்சொல்லுமொழி நம்புவாய்கெட்டுப்போகாதே ()

ஏ திருடா! இதாவுனக்கழகு? மரியாதையல்ல. வீணில் மடியாதே. எம் வள்ளியை விட்டுவிடு.

ஷண்முகன்.—ஏ வேடர்களே! நீங்கள்யாவர்? இப்பெண்மணி யாருக்குரியவள்? வீணே ஏன் பிதற்றுகிறீர்கள்? உம்மால் ஆனதெல்லாம் பாருங்கள். என்னுடைய வள்ளியை நான் விடேன்.

இளையவன்.—ஹா! என்ன சொன்னாய்? வள்ளியை விடமாட்டாயா? உன்கதி என்னாகிறதென்று பார். ஒரே வீச்சாய் உன் தலையை துண்டித்தெரிகிறேன்.

ஷண்முகன்.—அவ்வளவு சாமார்த்தியசாலிகளா நீங்கள்? இந்தாருங்கள்.

[ஷண்முகன் வேலாயுதத்தைக் காண்பிக்கவே, எல்லோரும் மயக்கமுற்றுக் கீழே வீழ்கின்றனர்.]

வள்ளி.—(திடுக்கிட்டு) நாதா! என்னகாரியம் செய்தீர்கள்!

(பேயாண்டிதனைக்கண்டு என்ற மெட்டு.)

பரிகாசமாகவே தெரியாமல்பிழைசெய்தார்
பாதுகாத்தருளும் நாதா
அரிவாஸவனும்போற்றும் அப்புயனேபொற்பாதா
அன்போடேனைமணந்த ஆறுமுகவிநோதா (பரி)
யாரோவென்றறியாமல் அபசாரஞ்செய்தனர்
ஆதரித்தாளு மய்யனே
பாரோர்புகழ்சேர்கிரிப் பதிதனில் மேவிய
பன்னிருகைவடி வேலவா முருகய்யா (பரி)

நாதா! மன்னிக்கவேண்டும். தங்களைமணந்த இவ்வடியாளின் அண்ணமாரல்லவோ இவர்கள்? தங்களின் மைத்துனர்களல்லவோ? தயவுசெய்து இவர்களையாண்டருளும்.

ஷண்முகன்.—கண்மணி! நீ கவலையுறும்வண்ணம் நான் ஒருகாலும் நடந்துகொள்ளேன். நாம் மலைக்குச் சென்று, அங்கு நம் ஆஸனத்தமர்ந்தவுடன் இவர்கள் எழுந்திருப்பார்கள். வாசெல்வோம்

[வள்ளியும் ஷண்முகனும் மலையில் ஏறி, ஷண்முகன் மயில்வாகனத்தின்மீது அமருகின்றார் உடனே நம்பிராஜன். மைந்தர்கள் முதலியோர் தூங்கிவிழித்தவர்களைப்போல் எழுந்து நின்று, ஷண்முகனையும், அவர் பக்கலில் வள்ளியையும் தரிசிக்கின்றனர்.]

(நானேயழைத்துவருவேன் என்ற மெட்டு.)

நம்பினவனுநம்பி நீயெந்நாளும் (ந)

அம்புவிழியாள்வள்ளி அன்பிற்கிறங்கிப்பள்ளி
அடுத்துச்சிறையதனில் எடுத்துவந்தோம்மகிழக்
கடுத்தமொழிகள்தனை விடுத்துமனம்திகழ (ந)

ஏ நம்பி! நின் அன்பிற்கிறங்கிப் புகழ்ந்தேன். வேண்டுவ தென்ன?

நம்பிராஜன்.—பிரபோ!

(பிச்சையெடுத்துண்டு என்ற மெட்டு.)

அய்யனேமாமுரு கய்யனே எங்களை
யாட்கொண்டருள்புரி வீரே தெரியாமல்
ஐயோசெய்தோம்பிழையே இதோபணிந்
தோமுந்தன் தாளிணையே (அ)

தேன்மொழியாளெங்கள் வள்ளிக்குகந்தம
ணாளனிணையன்றிச் சிந்தைக்குகந்தவர்
செப்பிடவேறுமுண்டோ எங்கள்குல
தெய்வமே நீயே கண்டோம் (அ)

கருணாநிதே! தங்களையன்றி வேறு கதியுண்டோ எமக்கு? எம் பிழை பொருத்தருளல்வேண்டும். நாங்கள் கண்டுகளிக்க இம் மணம் பெற்றிருக்கலாகாதா?

ஷண்முகன்.—நம்பி! நீ வேறுவிதமாக எண்ணாதே. பக்தர்களின் பரிபக்குவநிலையையும் பக்தியையும் பரீக்ஷித்து, அதன் பின்னரே அவர்களை ஆட்கொள்ளவேண்டுவது விதியாதலால், நாம் பல வேறு ரூபங்கொண்டு வள்ளியை பரீக்ஷித்துக் கடாக்ஷித்தோம். கேவலம் தேகசம்பந்தமான மணமாயிருப்பின், நும்மாளிகையிலேயே மணக்கோலங்கொண்டிருப்போம். ஆதலால், கவலையை யகற்றி களிப்பெய்துவீர்களாக.

நம்பி.—ஆஹா! அவ்விதமே களிப்பெய்தினோம் தேவதேவா!

[நாரதர் வருகிறார்.]

நாரதர்.—(ஷண்முகனை நோக்கி) நமோ! நமோ! முருகா சொன்னவாறே முடித்துவிட்டீர்கள் போலும் (வள்ளியை நோக்கி) தாயே! நான் யாரென்று தெரிகின்றதா?

வள்ளி.—தினைப்புனத்திற்குவந்த முனிவரல்லவோ தாங்கள்?

நாரதர்.—ஆம் வள்ளியம்மையே! முன் தினைப்புனத்திற்கு வந்து தனிமையாய்க்கண்டேன். அப்பொழுது என்னைப் பலவாறு வெறுட்டினீர்கள். பின், கழுகுமலையில் ஷண்முகக்கடவுளுடன் தம்பதி சமேதராகக் காண்கின்றேன். இப்பொழுதோ?

ஷண்முகன்.—நாரதப்பிரம்மமே! அபலையாகிய இவள், தங்களை, திரிகாலவர்த்தமானங்களையு முணர்ந்த பெரியோரென் றறிவளோ? போனது போகட்டும். வள்ளியையும், நம்பிராஜனையும், அவர் மைந்தர்களையும் தாம் ஆசிர்வதிக்க வேண்டுகிறேன்.

நாரதர்.— ஸர்வ மங்களானிபவந்து.

[காவடிகொண்டு வருகிறார்கள்.]

எல்லோரும்.— (நோட்.)

வான்மணக்குந் தேவனும் வேலனுக் கரோஹரா
வள்ளிதெய்வ யானைமண வாளனுக் கரோஹரா
மறைதுதிக்கும் மிகமதிக்கும் அறுமுகர்க் கரோஹரா
வரந்தரு முருகன்வாஸச் சேர்கிரிக் கரோஹரா
மான்மணக்கும் ஒருகரத்தன் மைந்தனுக் கரோஹரா
வல்வினைகள் தீர்த்தருளும் மாமணிக் கரோஹரா
வஞ்சநெஞ்ச அவுணர்மாய வந்தவர்க் கரோஹரா
மால்மருகன் வாழுஞ்சீர்மைச் சேர்கிரிக் கரோஹரா
கான்மணக்கும் குறத்திபாற் கனிந்தவர்க் கரோஹரா
கதியென்றேத்து வோரைக்கார்க்கும் கண்யனுக் கரோஹரா
கந்தனுக் கரோஹரா கடம்பனுக் கரோஹரா
கைலைநேரும் மயில்களாடும் சேர்கிரிக் கரோஹரா
பான்மணக்கும் மெய்மணக்கும் பாவலர்க் கரோஹரா
பனுவல்மாலை பூணும்மார்பன் பரமனுக் கரோஹரா
பக்தனும்கோ பாலன்போற்றும் பண்பனுக் கரோஹரா
பரவுஞ்சங்கு நாதமோங்கும் சேர்கிரிக் கரோஹரா
அரோஹரா அரோஹரா அரோஹரா அரோஹரா
அரோஹரா அரோஹரா அரோஹரா அரோஹரா

மங்களம்.

(நோட்.)

மங்களம் ஜெயமங்களம் சுபமங்களம்
வானவர்க்கும் பாவலர்க்கும் வாழ்த்துமங்களம்
திங்களணி சங்கரர்க்கு ஜெயமங்களம்
தேவிமீன லோசனிக்குச் சுபமங்களம்
ஐங்கரர்க்கும் வல்லபைக்கும் மிகமங்களம்
அவனியுள் ளோரெவர்க்கும் அதிமங்களம்
எங்கும்புக ழூந்தமிழுக் கென்றுமங்களம்
ஈசனடி யார்தமக்கு ஜெயமங்களம்

(நோட் வேறு சந்தம்.)

இச்சரிதை யச்சிலிட்ட இறைவருக்கு மங்களம்
இனிதுவாசித் தேற்றிடும் பெரியருக்கு மங்களம்
மெச்சநாட கம்நடித்த வித்தகர்க்கு மங்களம்
மேவுங்கீர்த்தி சேர்மருங்கை வேந்தனுக்கு மங்களம்
பச்சைமயில் வாகனப் பரமனுக்கு மங்களம்
பக்கமேவும் வள்ளிகுஞ்ச ரிதனக்கு மங்களம்
இச்சையான பொருள்கொடுத்த நேயருக்கு மங்களம்
என்றுங்கோ பாலன் றனக்குஜெய மங்களம்

வாழி.

வாழி நான்மறைப் பூசுர ராவினம்
வாழி செந்தமிழ்ப் பாவலர் வானவர்
வாழி வள்ளிம ணம்பெறு கந்தனும்
வாழி மன்னரும் வையமும் வாழியே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

வே. கோபாலன்,
மருங்காபுரி.
1923.